# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN




யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்?

## இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்

ஏசாயா 6:8


TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

July - August 2018
Volume : 58

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 4

## SFC சீஷத்துவ முகாம்கள்















## அந்தமான் வாலிபர் முகாம்












# ஆசிரியரிடமிருந்து........!



பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு, எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாகிய இரட்சகர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தருக்குள் அன்பான நம் தலைவர்கள், மூத்த போதகர்கள், ஊழியர்கள், திருச்சபை விசுவாசிகள் ஆகியோர் 'பரிபூரண ஜீவன்' இதழுக்கு அளித்துவரும் ஆதரவு, காண்பிக்கும் ஈடுபாடு, தந்துதவும் செய்திகள் அனைத்துக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நமது தமிழ் பிரதேசம் 70ம் ஆண்டு நிறைவை கொண்டாடுகிற இந்த நாட்களில், தேவன் நமது பிரதேசத்திற்கு பாராட்டின நன்மைகளை நினைத்து கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்! பல தேவ மனிதர்களின் ஜெபத்தாலும், உழைப்பாலும், தியாகத்தாலும் வளர்ந்து வந்த நமது பிரதேசத்தில் தற்போது சுமார் 2000-த்திற்கும் அதிகமான அங்கீகரிக்கப்பட்ட சபைகள் மற்றும் கிளை சபைகள் உள்ளன. 1200-க்கும் மேலான முழு நேர ஊழியர்களும், 2.5 இலட்சத்திற்கும் மேலான அங்கத்தினர்களும் உள்ளனர். தமிழ் பிரதேச ஏ.ஜி. சபைகள் இன்று வேகமாக வளர்ந்து வருகின்றன. தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்! இன்னும் நமது ஊழியங்கள் எல்லா விதத்திலும் வளர்ந்து பலருக்கு மாதிரியாக திகழ தொடர்ந்து ஜெபிப்போம்! பிரயாசப்படுவோம்!

நமது பிரதேசத்தின் பத்திரிக்கை ஊழியமான 'பரிபூரண ஜீவன்' கடந்த 58 ஆண்டுகளாக அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகிறது. தற்போது 13000 பிரதிகள் அச்சிடுகிறோம். இதின் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறதை அவ்வப்போது தொலைப்பேசி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும், நேரடியாகவும் கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைகிறோம்!

நமது பத்திரிக்கையை அறியாதவர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள். தேவையுள்ளோர்க்கு வாசிக்க கொடுத்து உதவுங்கள். உங்கள் விலாச மாற்றங்கள், தொலைப்பேசி எண்களைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் சந்தாவை மறவாமல் அனுப்பி வையுங்கள். நீங்கள் இவ்விதழ்கள் மூலம் பெறும் நன்மைகளை, ஆசீர்வாதங்களை தவறாமல் சாட்சியாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தொடர்ந்து இந்த பத்திரிக்கை ஊழியத்தை உங்கள் அன்பால்,பொருளாதார உதவியால், ஜெபங்களால் தாங்கி ஆதரிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கர்த்தர் தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தையும், நீங்கள் செய்யும் பணி மற்றும் ஊழியங்களையும் அதிகமதிகமாக ஆசீர்வதிப்பாராக!

## ஆசிரியரின் செய்தி

# யார் நமது காரியமாய்ப் போவான்?

அறுவடை நாயகன் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! நாம் அறுவடையின் நாட்களில் வாழ்ந்து வருகிறோம். இந்த கடைசி நாட்களில் ஆத்தும அறுவடை பணிக்கு முதலிடமும் முக்கியத்துவமும் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியும் அறுவடைக்கு நம்மை அழைக்கும் நான்கு சத்தங்களை கேட்டு அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.

### 1. உன்னதத்திலிருந்து வரும் தேவனுடைய கட்டளை
### The COMMAND from the HEAVEN above

உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, 'நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்' என்று கட்டளையிட்டார் (மத்தேயு 28:18-20). இந்த கட்டளையை நான்கு சுவிசேஷங்களிலும் வாசிக்கிறோம். (மாற்கு 16:15; லூக்கா 24:47; யோவான் 20:21). அறுவடை பணி இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியின் மீதும் விழுந்த கடமை (1கொரி.9:16). யாரை நான் அனுப்புவேன்? யார் எனது காரியமாக போவான்? என்று தேவன் இன்றும் நம்மை பார்த்து கேட்கிறார் (ஏசாயா 6:8). தேவனுடைய இந்த அழைப்புக்கும் கட்டளைக்கும் கீழ்ப்படிய நீங்கள் ஆயத்தமா?

### 2. நரகத்திலிருந்து வரும் கதறல்
### The CRY from the HELL below

இயேசு இல்லாமல் மரிக்கும் அனைவரும் நித்தியமான நரகத்திற்கு செல்கிறார்கள். லூக்கா 16:27,28 வசனங்களில் வேதனையுள்ள இடமாகிய நரகத்திலிருந்து ஐசுவரியவான் இப்படியாக கதறுகிறான். 'தகப்பனே, எனக்கு ஐந்து சகோதரருண்டு. அவர்களும், வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடி அவன் (லாசரு) போய் அவர்களுக்கு சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டிற்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்' என்றான். இப்படியான கதறலின் சத்தம் இன்றும் நரகத்தில் உண்டாயிருக்கிறது.

ஆத்துமாவின் விலைமதிக்க முடியாத தன்மை (மாற்கு 8:36), இரட்சிக்கப்படாதவர்கள் நரகத்திற்கு செல்கிறார்கள் என்கிற வேத சத்தியம் (யோவான் 3:3; சங்கீதம் 9:17) ஆகியவை நம்மை ஆத்தும அறுவடை பணிக்கு பாரப்படுத்த வேண்டும். இன்று இந்தியாவில் மட்டும் சுமார் 28,000 பேர் தினமும் இயேசு இல்லாமல் மரிக்கிறார்கள். அன்பான தேவ ஜனமே, பரிசுத்த ஆவியானவருடைய சத்தத்திற்கு நாம் உணர்வுள்ளவர்களாயிருப்போம் என்றால் மக்களின் வேதனை நிறைந்த குரலை கேட்க முடியும்.

### 3. மக்களிடமிருந்து வரும் அழைப்பு
### The CALL from the HUMANITY outside

ஒரு முறை பவுலின் தரிசனத்தில் மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று, நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான் (அப்போஸ்தலர் 16:9). இதைப்போல இன்று சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் நம்மை அழைக்கிறார்கள். பவுல் அந்த அழைப்பை ஏற்று அங்கு சென்றபடியால் திரளான

மக்கள் இரட்சிக்கப்பட்டனர். சபை ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் கொர்நெலேயுவின் அழைப்பை ஏற்று பேதுரு அவனுடைய வீட்டுக்கு சென்று இயேசுவை அறிவித்தபடியால் கொர்நெலேயுவின் குடும்பமும் நண்பர்களும் இரட்சிக்கப்பட்டனர் (அப்.10: 22). இயேசுவைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள் (ரோமர் 10:14)? இயேசுவை அறியாத ஜனங்களின் அழைப்பை உங்கள் காதுகள் கேட்கவில்லையா?

## 4. உள்ளத்திலிருந்து வரும் உந்துதல்
## The CONSTRAINT from the HEART within

கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (2கொரி.5:14). தேவப்பிள்ளையே, தேவ அன்பு உன்னில் இருக்குமானால் நீ சும்மா இருக்கமாட்டாய். இயேசுவுக்காய் ஏதாகிலும் செய்துகொண்டிருப்பாய். ஆத்துமாக்களுக்கு நற்செய்தியை அறிவிப்பாய். இயேசுவின் அன்பினால் தொடப்பட்ட சமாரிய பெண் ஒரு பட்டணத்தையே இயேசுவிடம் கொண்டு வந்தாள் (யோவான் 4:28-30). பிசாசு பிடியிலிருந்து விடுதலையான மனிதன் இயேசுவின் அன்பினால் ஏவப்பட்டு தன் இனத்தாருக்கு, குடும்பத்தினருக்கு, நண்பர்களுக்கு இயேசுவை அறிவித்தத்தோடு பத்து பட்டணங்களில் (தெக்கபோலி) இயேசுவை குறித்து பறைசாற்றினான் (மாற்கு 5:19,20). அருமையான தேவ ஜனமே, இந்த நாட்கள் நற்செய்தி அறிவிக்கும் நாட்கள். அறுவடை நாட்கள். நாம் மவுனமாயிருந்தால் குற்றம் நம்மேல் சுமரும் (2 இராஜா. 7:9). ஆகவே,

**• கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் (Visualize)**

வயல் நிலங்கள் அறுப்புக்கு விளைந்திருக்கிறதை உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று இயேசு கூறினார் (யோவான் 4:35). இயேசு திரளான ஜனங்களை கண்டு மனதுருகினார் (மத்தேயு 9:36). இயேசுவைப்போல ஆவிக்குரிய கண்களோடு ஜனங்களை பாருங்கள்.

**• பாரத்தோடு ஜெபியுங்கள் (Agonize)**

ஆத்துமாக்களுக்காக பாரத்தோடு திறப்பில் நின்று ஜெபியுங்கள் (எசே.22:30). இயேசு அழிந்து போகிற மக்களுக்காக கண்ணீர் விட்டார் (லூக்கா 19:41).

**• நற்செய்தி அறிவியுங்கள் (Evangelize)**

நீங்கள் இருக்கும் இடங்களில், கிராமங்களில், பட்டணங்களில், தெருக்களில், பெருவழிகளிலெல்லாம் ஜனங்களுக்கு இயேசுவின் நற்செய்தி கூறுங்கள் (லூக்கா 14:21-23,மாற்கு 16:15). சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கியுங்கள் (2 தீமோ. 4:2). உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்! கர்த்தர் தாமே உங்களை அறுவடை பணியில் வல்லமையாக பயன்படுத்துவாராக!

**Rev.Dr. ஜெரி டேனியல்,**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்),
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி.



# உயிர்மீட்சியே நமது தேவை


**Rev. Dr. L. ஜெயபாலன்**

உபதலைவர், தமிழ் பிரதேச ஏ.ஜி. நிர்வாகக்குழு




**“ஆண்டவரே, நீர் எங்களைத் திரும்பவும் உயிர்ப்பிக்க மாட்டீரோ” சங்கீதம் 85:6**

உயிர்மீட்சி (Revival) என்றால் திரும்பவும் உயிர் பெறுதல் (Coming back to life) என்று பொருள். இது அலட்சியம், அசட்டை, சோர்வு போன்றவைகளிலிருந்து விடுதல் பெற்று, திரும்பவும் உயிர்ப்பிக்கப்படுவதாகும்.“எழுப்புதல்” அல்லது உயிர்மீட்சி (Revival) என்பது ஜனங்களிடத்தில் பாவம் மிகுந்து காணப்படுகின்ற வேளையில், பரிசுத்தாவியானவர், வேத வசனத்தின் மூலமாக அவர்களிடத்தில் காணப்படும் மனமாற்றத்தின் கிரியைகளை வெளிப்படுத்துவதாகும். உயிர்மீட்சி என்பது ஒருவரின் வாழ்க்கையில் ஒரே தடவை நடப்பதாகும். புதுபிக்கப்படுதல்(Renewal) என்பதோ பல தடவை நடப்பதாகும்.

“ஜெபிக்கின்ற, உயிர்மீட்சியடைந்த, ஆத்ம பாரமுள்ள ஒரு போதகரை காட்டுங்கள். அப்பொழுது அதே அனுபவங்கள் நிறைந்த சபை விசுவாசிகளைக் காட்டுகிறேன்” என்றார் காலஞ்சென்ற ஆஸ்வால்டு J.ஸ்மித் என்ற போதகர். பாவம் வெகுவாகப் பெருகியிருக்கின்ற இந்நாட்களில் கடவுளுக்காக மாபெரும் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று வாஞ்சிக்கிறவர்களின் வாழ்க்கையில் உயிர்மீட்சி ஏற்படும். இதற்கு பிராத்தனை, வேத வசனத்தை கருத்துடன் வாசித்தல், சபையின் ஆவிக்குரிய கூட்டங்களில் ஆராதனைகளில், ஐக்கியங்களில், தவறாது பங்கெடுத்தல் போன்றவை அதிகமாக உதவும்.

## உயிர்மீட்சிக்கு அடிப்படையாக இருப்பவைகள்

பாவ உணர்வு (Conviction) : அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களைக் குறித்த உணர்வும், மன வேதனையும். பாவ அறிக்கை (Confession) : கடவுளுக்கு முன், மனம் வருந்திக் கண்ணீர் விடுதல், அறிக்கை செய்தல். பிறரிடம் ஒப்புரவாகுதல். பிரதிஷ்டை அல்லது அர்ப்பணம் (Commitment & Consecration) : புதிய வாழ்க்கை நடத்த, பரமபிதாவுக்கு முன், கிறிஸ்துவின் மூலம், ஆவியானவரின் உதவியால் தன்னை அர்ப்பணித்தல். உயிர்மீட்சி என்பது, ஒரு தேவ பிள்ளையை, அவர் இயேசுவிடம் கொண்டிருந்த ஆதி அன்பிற்குள் நடத்துகிறது. கிறிஸ்தவ வாழ்க்கையிலே, ஊழியத்திலே ஒரு புதிய தெம்பு உண்டாக்குகிறது.

## உயிர்மீட்சி தேவமக்கள் வாழ்க்கையில் வரும் விதங்கள்

**1. கிருபையின்படி அவர் உயிர்பிக்கின்றார் :**

“உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும்”. சங்.119:88. St.அகஸ்டின் என்ற இறையியல் வல்லுனர், “மீட்கும் கிருபை, காக்கும் கிருபை, வழிநடத்தும் கிருபை” என்று குறிப்பிடுகின்றார். கிருபை என்பது பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களுக்குக் கடவுள் அருளும் வரப்பிரசாதமாகும் (Unmerited favour). கிரேக்க அரசன் தனது பிறந்த நாளில் ஒரு பணமுடிப்புடன் மக்கள் முன் அரண்மனையில் தோன்றி, அங்கும் இங்கும் பார்ப்பானாம். திரளான மக்கள் ஆவலுடன் மன்னனை நோக்குகையில், திடீரென ஒரு குறிப்பிட்ட நபரை மேடைக்கு அழைத்து அந்த பொன்முடிப்பை அவனுக்கு கொடுப்பானாம். அவனுக்கும், மனைவி பிள்ளைகளுக்கும் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகுமாம். மற்றவர்கள், தனக்கு கிடைக்கவில்லையே என

அங்கலாய்ப்பார்களாம். ஆனால் கடவுளின் கிருபை நம் எல்லோரையும் தேடி வந்துள்ளது.

**2. கட்டளை/வார்த்தையின் மூலம் உயிர்பிக்கின்றார்:**

"நான் ஒரு போதும் உம்முடைய கட்டளைகளை மறக்க மாட்டேன். அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்" (சங்.119:93,107). 10 கட்டளைகள், பிரமாணங்கள், சடங்காச்சார, சமுதாய, சமய தேசிய கட்டளைகள் என பல உள்ளன. "கட்டளை" என்பது தெரிந்தெடுப்போ (Choice) மறுப்போ (Refuse) இன்றி கடைபிடிக்க வேண்டிய இராணுவக்கட்டளை (Military Order) போன்றதாகும். அவைகள் எப்போதும் நமது நன்மைக்கே நமது பாதுகாப்பிற்கே! ஒரு அரசாங்கம் அல்லது தொழிற்சாலை இலகுவாக நல்ல முறையில் இயங்க அடிப்படை விதிகள், உபவிதிகள் தேவை. தாவீது, உரியாவின் மனைவியிடம் தவறாக நடந்து கொண்ட பொழுது "நீ கர்த்தருடைய வார்த்தையை அசட்டை பண்ணியது என்ன?... நீ என்னை அசட்டை பண்ணினாய்" என்று தாவீதை கடிந்து கொண்டார் (2 சாமு. 12:9-10).

**3. ஆவியின் மூலம் உயிர்பிக்கின்றார்:**

"தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11). ரோமர் 7ம் அதிகாரத்தில் உடலில் ஏற்படும் போராட்டத்தைக் குறித்து பவுல் எழுதியுள்ளார். ஆனால் 8ம் அதிகாரத்தில் ஆவியின் மூலம் வரும் வெற்றி, உயிர்மீட்சியைக் குறித்து எழுதியுள்ளார். இதை வாசிக்கின்ற நீங்கள் உயிர்மீட்சி அடைந்தும் ஆவிக்குரிய வாழ்வில் சோர்வாக இருப்பீர்கள் என்றால் கர்த்தர் தாமே உங்களை புதுப்பிப்பாராக. இதுவரைக்கும் உயிர்மீட்சியே இல்லாதவராக இருப்பீரானால், கர்த்தர் தாமே உங்களுக்கு உயிர்மீட்சியைத் தருவாராக. உங்கள் வாழ்க்கையில் "ஆவிக்குரிய நடை" எடுத்து வைக்க ஒரு புதிய அத்தியாயத்தை கர்த்தர் துவக்கி வைப்பாராக. கர்த்தரிடம் உங்கள் பின்மாற்றத்தை அறிக்கையிடுங்கள். விடுதலை பெற்று முன்னேறிச் செல்லுங்கள்.

சட்டக் கல்லூரி மாணவன் ஒருவன் இரட்சிக்கப்பட்டான். அவன் தன் அறையில் அமர்ந்து வேதாகமத்தை வாசிக்கையில், யாராவது கதவைத் தட்டினால் உடனே பயத்துடன் பைபிளை பிற நூல்களுக்கு அடியில் ஒளித்து வைப்பானாம். ஆவியானவர் அவனை உணர்த்தவே மனுஷர் பயத்திலிருந்து விடுதலை அடைந்தான். உயிர்மீட்சியின் பாதையில் செல்ல பரமபிதா அவனுக்குள் கிரியை செய்தார். அபிஷேகத்திற்காக ஒரு காட்டில் ஜெபிக்கையில், ஏதாவது கொப்பு உடைந்து கீழே விழும் சத்தம் கேட்டால் கண்ணைத் திறந்து பார்ப்பானாம். தனக்குள் இன்னும் பயம் இருப்பதை பரிசுத்தாவியானவர் உணர்த்தவே, "இனி பஞ்ச பூதங்களே வந்தாலும், ஜெபிக்கையில் கண்ணைத் திறக்க மாட்டேன், என சொல்லி, ஊக்கமாக ஜெபிக்க, பரிசுத்தாவியானவர் அவனுக்குள் இறங்கினார்". அப்பொழுது, "போதும் போதும்" என்று கதறினான்.

பின் நாட்களில் அமெரிக்காவை அசைத்த அந்த தேவமனிதன் சார்ல்ஸ் பின்னி என்ற வாலிபன் தான். சட்டப்படிப்பு படித்த அவரை கர்த்தர் வல்லமையாய் உபயோகித்தார். இவர் மூலமாய் பல இடங்களில் சபை மக்களும் பிறரும், கர்த்தருடைய வார்த்தையால், ஆவியில் தொடப்பட்டு, உயிர்மீட்சி அடைந்தனர். இவர் தனக்கு திருமணமான ஒரு வாரத்தில், கடவுளின் வார்த்தையை பிரசங்கிக்கச் சென்று ஆறு மாதங்கள் கழித்து தனது இளம் மனைவியை காணவந்தார். குணசாலியான அவருடைய துணைவியும் பொறுமையுடன் காத்திருந்தார்களாம்.

தொடரும்......

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற வாஞ்சையுடன் இருப்பவர்கள் 0-94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!...



# சபைக்கு வெறும் பாத்திரங்களை கூட்டி வாருங்கள்

**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

வேதபகுதி : 2 இராஜாக்கள் 4:1-7

### தீர்க்கதரிசிகளின் புத்திரர்

பழைய ஏற்பாட்டு காலத்திலே இப்படிப்பட்ட ஓர் கூட்டம் இருந்தது. இவர்கள் தீர்க்கதரிசிகளுடைய பிள்ளைகள் அல்லர். இவர்கள் தீர்க்கதரிசிகளின் சீடர்கள், உடன் ஊழியர்கள், இப்படிப்பட்ட ஓர் நபர் திடீரென்று மரித்துவிட்டான்.

### கர்த்தருக்கு ஊழியம் செய்கின்றவர்களுக்கும் பிரச்சனைகள் வரலாம்

இவன் கொஞ்ச வயதுடையவனாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏதோ ஓர் காரணத்தினால் திடீரென்று மரித்துவிட்டான். அவன் கர்த்தருக்கு பயந்து நடந்தான் என்று அவனுடைய மனைவி சாட்சி கூறுகிறாள், பணநெருக்கடியில் கடன் வாங்கிவிட்டான். பொதுவாக தேவனுடைய பிள்ளைகள் கடன் வாங்கக்கூடாது. தேவைகள் வரும்போது கர்த்தரை நோக்கி ஜெபிக்க வேண்டும்.

இன்றும் தேவனுடைய பிள்ளைகள் கடன் வாங்கிவிடுகிறார்கள். எல்லாரையும் போல நாமும் சில சமயங்களில் பொருளாதார நெருக்கடியில் அகப்பட்டுவிடுவோம்.

### தேவபிள்ளைகள் கவனிக்க வேண்டியவை :

1. வரவு அறிந்து செலவு செய்ய வேண்டும்.
2. வீண் செலவுகள், ஆடம்பர செலவுகள் செய்யாதபடி எச்சரிப்பாயிருக்க வேண்டும்.
3. தேவைகள் வரும்போது கர்த்தரை நோக்கி ஜெபிக்க வேண்டும்.
4. கடன் வாங்குவதை ஓர் சாபமாக எண்ண வேண்டும்.

சிலர் எளிதாக கடன் வாங்கி விடுகிறார்கள். நகைக்காக, ஆடம்பர செலவுகளுக்காக கடன் வாங்கிவிடுகிறார்கள். இன்று கடன் கொடுக்க பலர் ஆயத்தமாயிருக்கிறார்கள். எனவே இன்று கடன் வாங்குவது சாதாரண காரியமாகிவிட்டது.

### மனைவி செய்த காரியம் என்ன?

இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவள் தீர்க்கதரிசியை தேடிப்போகிறாள். தேவ ஆலோசனையை கேட்கப்போனாள். இன்னொரு நபரிடம் கடன்வாங்க போகவில்லை. சரியாக காரியத்தைச் செய்தாள்.

சிலர் இந்த சூழ்நிலையில் என்ன செய்வார்கள்? கர்த்தரை குறை சொல்லுவார்கள். பிறரிடம் கடன் கேட்பார்கள் அல்லது தற்கொலை செய்ய யோசிப்பார்கள்.

### வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது

இந்த சூழ்நிலையிலும் அவளிடம் ஓர் குடம் எண்ணெய் இருந்தது. ஒன்றும் இல்லா நிலையிலும் நம்மிடம் பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார். இரட்சிப்பு

இருக்கின்றது. வேதவசனம் இருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. தேவன் மேலுள்ள விசுவாசம் இருக்கின்றது. தேவனுடைய பிள்ளைகளிடம் பணம் அதிகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் பணத்தைவிட மேலான நன்மைகள் பல நம்மிடம் உள்ளன.

**பக்கத்து வீட்டாரிடம் வெறும் பாத்திரங்களை கேட்டு வாங்கி வீட்டை நிரப்பு**

நாம் தேவனுடைய பிள்ளைகள், நமது பக்கத்து வீடுகளில் பணக்காரர்கள் பலர் இருக்கலாம். படித்த மேதைகள் பலர் இருக்கலாம். வசதியுள்ளவர்கள் ஏராளம் இருக்கலாம். ஆனால் இயேசு இல்லாத இவர்கள் வெறும் பாத்திரங்கள் என்று உணருங்கள். எவ்வளவுதான் செல்வம் இருந்தாலும் இயேசு இல்லாத வாழ்க்கை ஓர் வெறுமையான வாழ்க்கையே. அவர்களுக்கு உண்மையான சந்தோஷம் இல்லை, சமாதானமில்லை. நிம்மதி இல்லை, ஆரோக்கியமில்லை. இவர்களை வெறும் பாத்திரங்களாக பாருங்கள்.

உலகப்பிரகாரமான நிறைவு உள்ளவர்கள் போல காணப்பட்டாலும் உண்மையில் ஆவிக்குரிய நிலையில் இவர்கள் வெறும் பாத்திரங்களே.

சபை விசுவாசிகளே! உங்கள் அக்கம் பக்கம் உள்ளவர்களை உற்றுப் பாருங்கள். உங்கள் பக்கத்து தெருவில் உள்ளவர்களை கவனியுங்கள். அவர்கள் இயேசு இல்லாத, இரட்சிப்பு இல்லாத வெறும் பாத்திரங்கள்.

இவர்களுக்காக ஜெபித்து இவர்களை சபைக்கு கொண்டு வருவது உங்கள் கடமை. உங்கள் சிலாக்கியம்.

நாம் நிரப்பப்பட்ட பாத்திரங்களாய் இருக்கின்றோம். வாரந்தோறும் ஆராதனைகளில் கலந்துகொண்டு பரிசுத்த ஆவியின் எண்ணெயால் நிரப்பப்படுகிறோம். நிரம்பினதையே நிரப்புவதில் என்ன பயன்.

**இரண்டு பையன்களும் பக்கத்து வீடுகளிலிருந்து பாத்திரங்களை வாங்கி வந்தார்கள்**

இது எளிதாக நடத்திருக்காது. ஏற்கனவே கணவனை இழந்து விதவையாக இருக்கும் பெண்ணுக்கு யார் பாத்திரங்களை கொடுப்பார்கள்? கடனிலிருக்கும் இந்த குடும்பத்திற்கு யார் எளிதில் பாத்திரங்களை கொடுப்பார்கள்.

விசுவாசிகளே! உங்கள் வேலையும் கடினமானதுதான். எளிதில் ஆட்கள் சபைக்கு வந்துவிடமாட்டார்கள். வருந்தி அழைக்க வேண்டும். திரும்ப திரும்ப அழைக்க வேண்டும். ஜெபத்துடன் அழைக்க வேண்டும்.

பக்கத்து வீட்டுக்காரர்களிடம் அன்பாக பழகுங்கள். சில விசுவாசிகள் யாரிடமும் பழக மாட்டார்கள். சபைக்கு வந்து போவார்கள். ஆனால் வேறுயாரிடமும் அன்பாக பழக மாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் அழைத்தால் யாரும் சபைக்கு வரமாட்டார்கள். உங்கள் பக்கத்து வீட்டு மக்களிடம் எப்போதும் அன்பாக பழகுங்கள். அவர்கள் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு நல்ல நண்பர்களாக இருங்கள்.

**வெறும் பாத்திரங்கள் எண்ணெயால் நிரப்பப்பட்டன**

வாங்கிக்கொண்டு வந்த அத்தனை பாத்திரங்களிலும் ஊற்ற ஊற்ற எண்ணெய் பெருகிக் கொண்டே இருந்தது. எல்லாப் பாத்திரங்களும் நிரப்பப்பட்டன. நம்மிடமுள்ள இரட்சிப்பு, பரிசுத்த ஆவி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் போது அவர்களும் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவார்கள். நம்முடைய சபைகளுக்கு புதிய ஆத்துமாக்களை கூட்டிக்கொண்டு வர ஆவன செய்யுங்கள்.

## உங்கள் ஆவிக்குரிய வாழ்வின் நிலையை சோதித்தறியுங்கள்!!

| ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கை | ஆரோக்கியமற்ற ஆவிக்குரிய வாழ்க்கை |
| --- | --- |
| ஊக்கமான ஜெபம் | மந்தமான ஜெபம் |
| வேதம் வாசித்தல் இனிமையானது | ஆர்வமில்லாத வேத வாசிப்பு |
| கர்த்தரில் முழுமையான நம்பிக்கை கொண்டிருத்தல் | பதட்டத்துடனும், சந்தேகத்துடனும் இருத்தல் |
| மற்றெல்லாவற்றையும் விட கர்த்தரை சேவித்தல் | கர்த்தரைவிட இவ்வுலக காரியங்களை அதிகமாக நேசித்தல் |
| பாவத்தை எதிர்த்தலும் வெறுத்தலும் | பாவத்தோடு சமரசம் செய்தல் |
| அனைத்திலும் தேவனை மகிமை அடையச் செய்தல் | அனைத்திலும் தற்பெருமையைத் தேடுதல் |
| இருதயத்தில் சமாதானத்துடன் இருத்தல் | இருதயத்தில் கவலை கொள்ளுதல் |
| அனைத்திலும் நன்றி செலுத்துதல் | எப்பொழுதும் முறுமுறுத்தல் |
| எப்போதும் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டிருத்தல் | எப்போதும் வருத்தத்துடனும் பெருமூச்சுடனும் இருத்தல் |
| உபத்திரவத்தில் அமைதியுடனும் பொறுமையுடனும் இருத்தல் | எளிதில் கோபம் கொள்ளுதல் |
| மற்றவர் நலத்தில் கருத்துடன் இருத்தல் | சுயநலத்தில் கருத்தாய் இருத்தல் |
| அனைத்திலும் தேவனுக்குரியதைத் தேடுதல் | எப்போதும் சுகபோக நாட்டத்துடன் இருத்தல் |
| ஆவிக்குரிய காரியங்களில் வாஞ்சையுடன் இருத்தல் | இதயத்தில் இவ்வுலக காரியங்களை இச்சித்தல் |
| பிறரைத் திடன் கொள்ளச் செய்யும் வார்த்தைகளைப் பேசுதல் | பிறரைக் குறை கூறும் வார்த்தைகளைப் பேசுதல் |
| கிறிஸ்துவுக்கு சாட்சி பகருவதில் மகிழ்ந்திருத்தல் | சாட்சியாய் இருக்க வல்லமை இழந்து கவலைப்படுதல் |
| கர்த்தரின் ஊழியத்திற்கு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் கொடுத்தல் | உற்சாகமில்லாமலும், விருப்பமற்று கொடுத்தல் |
| பிறர் வெற்றியடையும்போது களிகூறுதல் | பிறர் வெற்றியைப் பார்த்து பொறாமை கொள்ளுதல் |
| பிறரின் துன்பத்தில் உதவிக்கரம் நீட்டுதல் | பிறர் துன்புறும் போது கண்டு கொள்ளாமலிருத்தல் |
| மன்னித்தலை விரும்புதல் | மன்னிக்க விரும்பாமலிருத்தல் |
| குணநலனுக்கு (நல் நடத்தைக்கு) முக்கியத்துவம் அளித்தல் | உடுத்துதலுக்கு முக்கியத்துவம் அளித்தல் |
| பிற பக்தியுள்ள கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் கொள்ளுதல் | உலக பிரமான நண்பர்களுடன் நட்புக்கொள்வதில் மகிழ்ச்சியடைதல் |
| கடிந்து கொள்ளுதலை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுதல் | புகழ்ந்து பேசும் வார்த்தைகளை மட்டும் விரும்புதல் |
| கர்த்தரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருத்தல் | கர்த்தருடைய வருகையைக் குறித்து சிறிதும் சிந்திக்காது இருத்தல் |

# தேவனுடைய வார்த்தை

## சங்கீதம் 119

119-ம் சங்கீதத்தில் தேவனுடைய வார்த்தையைக் குறித்து ஏறக்குறைய ஒவ்வொரு வசனத்திலும் கூறப்பட்டுள்ளது. அவைகள் வசனத்தைக் குறித்து சொல்வதை கீழே காண்போம்.

### I. தேவனுடைய பிள்ளைகள் செய்ய வேண்டியவை எவை?

- நாம் தேவனின் கற்பனையில் நடக்க வேண்டும் (119:1).
- நாம் அவருடைய கட்டளைகளைக் கடைபிடிக்க வேண்டும் (119:4,9) .
- நாம் அவைகளை இருதயத்தில் மறைத்து வைக்க வேண்டும் (119:11).
- நாம் அவைகளை தியானிக்க வேண்டும் (119:15).
- நாம் அவைகளை மறக்கக் கூடாது (119:6).

### II. தேவன் நமக்கு (நமக்காய்) என்ன செய்வார்?

- அவருடைய வார்த்தையினால் நம்மை பலப்படுத்துகிறார் (119:28).
- அவருடைய வார்த்தையினால் நம்மை இரட்சிக்கிறார் (119:41).
- அவருடைய வார்த்தையினால் நம்மை தேற்றுகிறார் (119:50,76).
- அவருடைய வார்த்தையினால் நம்மை உயிர்பிக்கிறார் (119:25).
- அவருடைய வார்த்தையினால் நம்மை வழிநடத்துகிறார் (119:105).

### III. அவருடைய வார்த்தை எப்படிபட்டது?

- அது உண்மையாயிருக்கிறது (119:86).
- அது நிலையாயிருக்கிறது (119:89).
- அது இனிமையாயிருக்கிறது (119:103).
- அது தீபமாயிருக்கிறது (119:105).
- அது ஒளியாயிருக்கிறது (119:105).



### IV. தேவனுடைய வார்த்தை எதனால் இன்பம் தரக்கூடியதாக இருக்கிறது?

- தேவனுடைய வார்த்தை சரியானது (119:128).
- தேவனுடைய வார்த்தை விலையேறப் பெற்றது (119:127).
- தேவனுடைய வார்த்தை அதிசயமானது (119:129).
- தேவனுடைய வார்த்தை புடமிடப்பட்டது மற்றும் சமூலமும் சத்தியமானது (119:140,160).
- தேவனுடைய வார்த்தை மகிழ்ச்சியானது (119:174).



# சுவிசேஷத்தை அறிவிக்கப்பழகுங்கள்

Rev. J. தேவதாசன் கலையரசன்
தலைமை போதகர், அம்பத்தூர் மண்டலம்

**சுவிசேஷ ஊழியம் பாகம் - 4**

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த உடன், பிலாத்து வீட்டுக்குச் சென்று காட்சிகொடுத்து இருந்தால், என்னவாயிருக்கும் என கற்பனை செய்து பாருங்கள். பிலாத்து அன்றே மனந்திரும்பியிருப்பான். அவரை கொடூரமாக, சிலுவையில் அறைந்த ஆசாரியகூட்டம் முன்பு உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து சில வினாடிகள் காட்சி தந்திருந்தாலும் அன்றைய சரித்திரமே மாறியிருக்குமல்லவா? முழு உலகத்திற்கும் பரம்பியிருக்குமே! நாம் இன்று சுவிசேஷ ஊழியத்திற்காக இவ்வளவு பிரயாசப்பட வேண்டிய அவசியமே இருந்திருக்காதே.

ஆனால் தேவ திட்டமோ, தனது மீட்பின் திட்டத்தை முதலாவது தனது சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டும், அனுபவிக்க வேண்டும். அதை நம்பி பிறரிடம் சாட்சியாக அறிவிக்க வேண்டும் என்பதேயாகும் (அப்.10:40-42). ஆகவேதான் கிட்டத்தட்ட 10 முறை மீண்டும் மீண்டும் தம்மை உயிரோடிருக்கிறவராய் காண்பித்து, தேவகுமாரனென்று பலமாய் நிரூபித்தார் (ரோமர்1:5) இந்த செய்தியை உலகெங்கும் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார் (மத்தேயு 28:7,9,20).

எனவே தான் இந்தியாவை தாரும் என்று ஜெபித்தால் போதாது. நாம் போய் சுவிசேஷம் அறிவிக்க வேண்டியிருக்கிறது. புறப்பட்டுச் சென்று மக்களைச் சந்திக்கும் விதம் குறித்து கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. பேச வேண்டியதின்னதென்று கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அறிவிக்காமல், பிரசங்கிக்காமல் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட முடியாது (ரோமர் 10:13-15, லூக்கா 10:1,5) இயேசு கிறிஸ்துவும் தமது சீஷர்களை பட்டணங்கள் தோறும், கிராமங்கள்தோறும், மக்களைச் சந்திக்க அனுப்பினார். தம்மைக் குறித்த செய்தியை அவ்வூர்களில் முன் அறிவிக்க அனுப்பினார் (லூக்கா 10:1-2).

எனவே எங்கு? எப்படி? மக்களை சந்திப்பது என்பதை இன்று கற்றுக்கொள்வோம். எப்படிப் பேசுவது என்பதையும் கற்றுக்கொள்வோம்.

## I. எங்கு மக்களைச் சந்திப்பது?

1. முதலாவது குடும்பத்தினரிடம், அறிமுகமானவரிடம் பேச ஆரம்பியுங்கள் (மாற்கு 5:19).
2. அவர்கள் மூலம் கிடைக்கும் தொடர்புகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கும் எல்லையை விரிவுப்படுத்துங்கள் (மாற்கு 5:20).
3. பின்பு அறிமுகமான மற்றவர்களிடம், ஆவியானவர் நடத்துதல்படியும் (அப்.8:29). உங்களது தைரியமான தெரிந்தெடுத்தல்படியும் மக்களை சந்திக்கலாம் (அப். 17:17).
4. வீதியிலும், வீட்டிலும் சென்று மக்களைச் சந்திக்க வேண்டும்; குறிப்பாக மக்கள் இருக்குமிடம் சென்று சந்திப்பதே சிறந்த பலனைத் தரும் (அப்.17:17; லூக்கா 10:5).

5. ஏற்றுக்கொள்ளும் மக்களுக்குச் சுவிசேஷம் அறிவித்தாலே போதுமானது (லூக்கா 10:5-11).

## II. எப்படி மக்களை அணுகுவது?

1. மக்கள் தங்கள் தேவையை உணரும் நேரத்தில் அவர்களைச் சந்திப்பது நூறுமடங்கு பலன்தரும் (மத்.9:36-38) - **Need-based Evangelism.** மக்கள் விடுதலையோடு உங்களை ஏற்றுக்கொள்ளும் சரியான நேரத்தில், விரும்பும் நேரத்தில் (யோவான் 11:21). அவர்களைச் சந்தியுங்கள். பொருத்தமில்லாத நேரத்தில் சந்திக்கும் சந்திப்புகள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடும்.
2. வீதியில் சொல்வதென்றாலும் (அப்.17:17). வீட்டில் சுவிசேஷம் சொல்வதென்றாலும் (லூக்கா 10:5). நட்பு ஏற்படுத்தி பின்பு சுவிசேஷம் அறிவிப்பதே சிறந்த பலனைத் தரும் (அப். 8:29-31) **- Friendship Evangelism.** அறிமுகமான மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, விருப்பம் இல்லையென்றால். அவர்கள் சுவிசேஷத்தை மட்டுமே புறக்கணிப்பார்கள். உங்களுக்கு தீமை செய்யமாட்டார்கள். அறிமுகமற்ற, அந்நியரிடமும் சொல்ல வேண்டும். அப்படி அறிமுகமற்றவரிடம் சொல்லும்போது, முதலாவது நட்பை ஏற்படுத்த வேண்டும். பின்பு அறிவிக்க வேண்டும்.
3. சுவிசேஷத்தை கேட்பவருக்குத் தகுந்தாற்போல அறிவிக்கப் பழகுவது அவசியம். (மாற்கு 4:33)**-Audience based Evangelism.**

## III. கற்றுகொள்ள வேண்டியது எளிய நான்கு படிகள்

**1. அறிந்தபடி சொல்ல ஆரம்பியுங்கள் (யோவான் 1:45). ஏற்கெனவே இயேசுவை பற்றி கற்று அறிந்ததைப் பேசுங்கள்.**

பிலிப்பு ஆதாயம் செய்தது நாத்தான்வேலை. அவன் இயேசுவைப் பற்றிக் கூறினதோ அரைகுறையான விதத்தில்தான். ஆயினும் அச்செய்தி ஆத்தும ஆதாயத்தைத் தடுத்து நிறுத்திவிடவில்லை.

**2. வாயில் வந்தது (யோவான் 4:29) தேவைப்படும் நேரத்தில் ஆவியானவர் தரும் வார்த்தை**

உங்கள் அருகில் பிரச்சனையுள்ள, தேவையுள்ள மக்களைக் குறித்து கேள்விப்பட்டால் உடனே சந்தித்துவிடுங்கள். Needbased Evangelism. அப்படிச் சந்திக்கும்போது அவர்களுடைய கடினமான கேள்விகள் ஏற்படுத்தும் நிர்ப்பந்தத்திற்குப் பதில் கூற தயங்க வேண்டாம். அப்போது ஆவியானவர் தரும் செய்தியை வாயில் வந்தபடி சொல்ல துணிவு கொள்ளுங்கள்.

பேசப்பேச பேச வேண்டியது தானாய்வரும். உங்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரும் ஏற்றபடி பேச உதவுவார் (மத். 10:19,20; எரேமியா 1:8,9).

**3. சாட்சி சொல்வது (லூக்கா 8:38,39)**

இரட்சிக்கப்பட்டதற்கு முன்/பின் என்று உங்கள் சாட்சியை இருபிரிவாகப் பிரித்துக் கூறுங்கள். சாட்சி சொல்வதின் நோக்கம் ஆர்வத்தைத் தூண்டுவது மட்டுமல்ல, நம்பிக்கையையும் உண்டாக்க வேண்டும் (எபி.4:2). சாட்சி சொல்ல கற்றுக்கொண்டால்... நிச்சயமாக சிறந்த சுவிசேஷகராவீர்கள்.

**4. ஒரு வரியில் கூறுவது (யோவான் 1:46)**

கீழே காணப்படும் சிலவரிகள் உலகமெங்கிலும் பலரால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

1. ஒருமுறை வந்து பாருங்கள்.

2. ஒருமுறை முயற்சி செய்யுங்கள்.

3. இயேசு உங்களை நேசிக்கிறார்.

4. உங்கள் பிரச்சனைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு இயேசு

இதுபோன்ற ஒரு வரிச்செய்திகள், கேட்பவருக்கு சில நிமிடங்கள்தான் கொடுக்க இயலும் என்ற சூழ்நிலையில் மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

**இறுதியாக :**

உங்கள் திறமையைச் சார்ந்து அல்ல, தேவ வழிநடத்துதல், தேவ ஒத்தாசையுடன் அறிவிக்கப் பழகுங்கள். வெறும் அறிவித்தலாக இராமல் பரிசுத்த ஆவியோடும், வல்லமையோடும், முழு நிச்சயத்தோடும் உங்கள் சுவிசேஷ பணி இருக்கட்டும். உங்கள் ஜெபம் மற்றும் பரிசுத்த ஆவியின் நிறைவு சுவிசேஷம் அறிவித்தலை வல்லமையுடையதாக மாற்றும் (1தெச.1:5). நீங்கள், உங்கள் வீட்டிற்குள் இருக்குமட்டும் உங்களுக்குள் இருக்கும் வரங்கள், கிருபைகள். தாலந்துகள் எதுவுமே வெளிப்படாது. துணிந்து மக்களைச் சந்தியுங்கள் இயேசு யார்? அவர் உங்கள் வாழ்க்கையில் என்ன செய்வார் என்பதை விசுவாசத்துடனும், ஆவியின் நிறைவுடனும் அறியுங்கள். நீங்கள் கர்த்தரால் பயன்படுத்தப்படுவதைப் பார்ப்பீர்கள்.

---


தேவனுக்கே மகிமை

**தமிழ் பிரதேச அசெம்பிளிஸ் ஆஃப் காட்**

**வழங்கும்**




**TV நிகழ்ச்சி**

பாருங்கள்!
பயனடையுங்கள் !!

தமிழன்

**தொலைக்காட்சியில்**

வியாழக்கிழமை தோறும் காலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை

**தேவ செய்தி அளிப்பவர்கள்**

**Rev.P.S. ராஜமணி, Rev.D.மோகன், Rev.A.ஆபிரகாம் தாமஸ்**

பிரதேச தலைவர்கள் மற்றும் மண்டல தலைமை போதகர்கள்

**Contact : Rev. I. Christudas, Director, Department of Evangelism & Church Planting**
Hope A.G. Church, No.1, Dr. Radhakrishnan St., Pallikaranai, Chennai - 100. Cell: 98412 98009

# இறுதி தடையும் விலகியது

**Rev. J. Samuel Jebaraj**

**Secretary, Mission Department**



கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் தமிழ் பிரதேச மிஷன் இயக்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

யோசுவா தலைமையில் கானான் தேசத்தை சுதந்தரிக்க நெருங்குகையில் யோர்தான் இறுதி தடையாக காணப்பட்டது. ஆனால் அந்தத் தடையும் விலகியது. தேசத்தை சுதந்தரித்தார்கள். பங்கிட்டு அதில் குடியேறினார்கள்.

இதை வாசிக்கிற அன்புக்குரியவர்களே, இந்த நாட்களில் தேவன் நாம் இந்தியாவை சுதந்தரிக்க இறுதியாக இருக்கிற தடைகளையும் தகர்க்க இருக்கிறார். ஆகவே நாம் கவனம் செலுத்த வேண்டிய சில காரியங்கள் இதோ....

**1. அதிகாலை எழுந்திருத்தல்** : (யோசுவா 3:1)

நாம் இந்தியாவை சுதந்தரிக்க அதிகாலை எழும்புகிற பழக்கத்தை விட்டு விடக்கூடாது. அதிகாலையில் தனித்து தேவ சமுகத்தில் நேரம் செலவழிப்பது மிக அவசியமானது. சபைகளில் அதிகாலை ஜெபம், அல்லது அதிகாலை ஆராதனை என்ற திட்டங்கள் மிகவும் அவசியமானது. இயேசு அதிகாலையில் எழுந்து ஜெபிக்கிற பழக்கத்தை வைத்திருக்கிறார் (மாற்கு 1:35).

**2. பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுதல்** : (யோசுவா 3:5)

தேவன் அற்புதங்களை செய்வதற்கும். பரிசுத்தத்திற்கும் தொடர்பு உள்ளது. யோசுவா ஜனங்களை பரிசுத்தப்படுத்தினது போல நாமும் நம்மோடு உள்ளவர்களும் தேவன் எதிர்பார்க்கிற பரிசுத்தத்திற்குள் வரவேண்டியது அவசியம். ஒரு ஆகான் நிமித்தம் ஒரு பெரிய சேனை தோற்றது நமக்கு தெரிந்ததே. எனவே நாம் இந்தியாவை சுதந்தரிக்க பரிசுத்த குறைவுகள் மாற வேண்டும்.

**3. உடன்படிக்கை பெட்டியை சுமந்து செல்லுதல்** : யோசுவா 3:6).

உடன்படிக்கை பெட்டியை சுமக்கிற ஆசாரியன் உள்ளங்கால்கள் யோர்தானில் பட்டவுடனே அந்த தடை உடைந்தது. இதை வாசிக்கிறவர்களே, நாம் இந்தியாவை சுதந்தரிப்பதற்கு இறுதி தடையாக காணப்படுகிற தடைகள் நாம் தேவ பிரசன்னத்தை சுமந்து செல்கிறவர்களாக இருந்தால் நிச்சயமாக விலகும். நாம் எளிதாக இந்தியாவை சுதந்தரிக்கலாம். தேவ பிரசன்னத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியம். ஒரு போதும் ஊழியர்கள், விசுவாசிகள் தேவ பிரசன்னத்தை இழந்துவிடக்கூடாது.

## மிஷனரி ஊழிய அறிக்கை

**மிஷன் பிராந்திய தலைவர்களின் கூடுகை :**

கடந்த ஏப்ரல் 17-ம் தேதி அன்று மிஷன் நிர்வாகக் குழுவினருடன் மிஷன் பிராந்திய தலைவர்களுக்கான கூடுகை நடைபெற்றது. இக்கூடுகையில் மிஷன் வளர்ச்சிக்கான பல திட்டங்களும் அதை நிறைவேற்றுவதற்கான செயல்முறைகளும் ஆலோசிக்கப்பட்டது. இக்கூடுகையிடில் இறுதியில் இவ்வாண்டு மிஷனரிகளாக தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்கான நேர்காணல் நடைபெற்றது.

## மிஷன் கன்வென்ஷன்

ஜூன் மாதம் 2-ம் தேதி அன்று தஞ்சாவூர் வடக்கு மண்டல சபைகளின் சார்பாக "மிஷன் தரிசன முகாம்-2018" சிறப்பாக நடைபெற்றது. மண்டல தலைமைப் போதகர் **Rev.G.பாரத்** அவர்களின் தலைமையில் மண்டலத்தின் போதகர்களின் ஒத்துழைப்போடுகூட மண்டல மிஷன் பொறுப்பாளர் **பாஸ்டர். பகவதி பால்** அவர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். சுமார் 120-க்கும் அதிகமானோர் கலந்து கொண்டார்கள். ராஜஸ்தானில் நமது தமிழ் பிரதேசத்தின் மிஷனரியாக ஊழியம் செய்யும் **Rev.G.ஜேம்ஸ்** அவர்கள் குடும்பமாக கலந்துகொண்டு தேவ செய்தியளித்தார்கள்.

## மிஷன் பிரயாணங்கள்

தமிழகத்திலிருந்து சபை விசுவாசிகளாக, போதகர் குழுக்களாக, போதகர் குடும்பமாக, மிஷன் இயக்கத் தலைவர்களாக, பொறுப்பாளர்களும், ஆந்திரா, தெலுங்கானா, பஞ்சாப், குஜராத், ஒடிசா, மத்திய பிரதேசம், பீகார், ஜார்கண்ட், மிசோராம் ஆகிய மாநிலங்களுக்கு சென்று நமது தமிழ் பிரதேசத்தின் மூலம் தாங்கப்பட்டு வருகிற மிஷனரிகளை சந்தித்து, உற்சாகப்படுத்தி, உதவிகளை செய்து, மிஷன் பணித்தளங்களுக்கு சென்று ஜெபித்து வந்துள்ளனர்.

## ஜெப விண்ணப்பங்கள்

- மிஷன் இயக்கத் தலைவர்கள், பிராந்திய மற்றும் மண்டலத் தலைவர்களுக்காக.
- தமிழ் பிரதேசத்தின் மூலமாய் தாங்கப்படுகிற சுமார் 600 மிஷனரி குடும்பங்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் தேவைகள் சந்திக்கப்படவும்.
- மிஷன் பணித்தளங்களில் எழுப்புதல் உண்டாக, ஆத்தும அறுவடை காணப்பட.
- மிஷன் பணித்தளங்களுக்கென்று சொந்த இடம் வாங்க, சபைகள் கட்டப்படுவதற்கான பணத்தேவைகள் சந்திக்கப்பட

## கொய்ரி மக்களினத்திற்காக ஜெபியுங்கள்

**மக்கள் இனம் :** கொய்ரி

**மொழி :** ஹிந்தி, போஜ்புரி, மகலி.

**மக்கள் தொகை :** 75,05,000. மதம் : இந்து

**கிறிஸ்தவர்கள் :** 0.00%

**நம்பிக்கை :** இவர்கள் தங்களை ராமனின் இரட்டை குழந்தைகளில் ஒருவனான குஷ்-ன் சந்ததிகளாக தங்களை நம்புகின்றனர்.

**அதிகம் வாழும் பகுதி** : பீகார், உத்திரபிரதேசம், ஜார்கண்ட்

**தத்தெடுத்துள்ள மண்டலம்** : சாத்தூர்

## மிஷனரிகளின் சாட்சிகள்

### 1. பாஸ்டர் சஞ்சய், மொகாமா, பீகார் :

கடந்த மாத கடைசியில் இரவு ஜெபம் எங்கள் சபையில் வைத்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரவு 1 மணி அளவில் அந்த பகுதியில் காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அதில் ஒரு போலீஸ்காரர் இரவில் கதவை தட்டியபோதும் எங்களுக்குக் கேட்கவில்லை. நாங்கள் ஜெபத்தில் இருந்தோம். பின்பு அடுத்த நாள் மதியம் அவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். மேற்கண்ட விஷயங்களை எங்களோடு

பகிர்ந்து கொண்டார். மேலும், அவர் எனக்கு சொன்னது. என்னுடைய சொந்த ஊர் ககரியா (Kagaria) நான் மொகாமா (Mokama) போலீஸ் ஸ்டேஷனில் போலீஸாக உள்ளேன். என்னுடைய சொந்த ஊரில் மெயின் ரோட்டில் எனக்கு சொந்த இடம் உள்ளது. அதை நான் சபைக்கு இலவசமாக தருகிறேன். யாராவது அங்கு வந்து ஊழியம் செய்தால் என்னால் இயன்ற உதவியை செய்வேன். ஆட்களை அனுப்புங்கள் என்று கேட்டுக்கொண்டார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**2. பாஸ்டர் ராஜ் பாரதி, சிம்ரி, பீகார்:**

எங்கள் சபைக்கு திமிர்வாதம் பிடித்த ஒருவர் கொண்டுவரப்பட்டார். அவருக்காக நாங்கள் ஜெபித்தோம். தேவன் அற்புத சுகத்தை கட்டளையிட்டார்.

மேலும் ஒருநாள் எங்கள் சபைக்கு வந்து கொண்டிருக்கும் ஒரு பெண் என் காலைப் பிடித்துக்கொண்டு என் மருமகளுக்காக ஜெபியுங்கள். அவள் கர்ப்பமாகி குழந்தை பிறக்கிற நேரத்தில் மருத்துவர்கள் கர்ப்பத்தில் குழந்தை மரித்துவிட்டது. எனவே குழந்தையை வெட்டிதான் எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது என்று தெரியவில்லை. எனது மருமகள் மற்றும் குழந்தைக்காக ஜெபியுங்கள் எனக் கேட்டுக் கொண்டார். உடனே ஜெபித்தோம். தேவன் அற்புத சுகத்தை கட்டளையிட்டார். அந்த பெண் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுக்க கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

---

## HOW TO KNOW GOD'S WILL?

There are five specific ways in which God guides us. It is listed below in their order of importance.

1. **Commanding Scripture:** It means that believers are to be informed by the worldview and values contained in God's Word. God will never guide us to do things that contradict His Word.
2. **Compelling Spirit:** This implies that we have sufficient spiritual maturity to be able to discern the difference between the guidance or prompting of God's Holy Spirit and our personal feelings. Just because we feel something doesn't mean that God is behind it or in it.
3. **Common Sense:** a reminder of the important difference between authentic faith and naive credulity. God gives us common sense for a reason. It's important that we make good use of it.
4. **Counsel of the Saints:** Like it says in Proverbs 15.22, "Plans fail for lack of counsel, but with many advisers they succeed." It's never a bad idea to seek the wisdom of mature believers when we're considering a course of action.
5. **Circumstantial Signs:** A lot of folks seem to think that the main way God speaks to us is through circumstantial signs. In fact, it's number five, at the bottom of the list, for a reason. Our circumstances can sometimes flat out contradict God's will for our lives. Remember how in the psalms David wonders why the wicked prosper, while Job wonders why he's suffering despite his having lived an upright life? We live in a fallen world and life isn't always fair. So while circumstantial signs sometimes may be a way God guides us, they are not necessarily the chief or most important way. Rather than focusing on signs, really get to know your Bible, be open to the guidance of God's Holy Spirit, use your common sense, and seek the counsel of the saints.

# கொடுப்பதே பாக்கியம்

கிறிஸ்தவ வாழ்வில் கொடுத்தல் ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறது. நமது ஆண்டவராகிய தேவன் கொடுக்கிறார். தம்முடைய குமாரனாகிய இயேசுவை நமக்காக கொடுத்தார் (யோவான் 3:16). குமாரனாகிய இயேசு தம்முடைய ஜீவனை நமக்காக சிலுவையில் கொடுத்தார் (மத்.20:28). பரிசுத்த ஆவியானவர் நமக்கு வரங்களையும் கிருபைகளையும் அளிக்கிறார் (1கொரி.12). இப்படி கொடுக்கிற தேவனை சேவிக்கிற நாமும் கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் என்று வேதம் கூறுகிறது (அப்.20:35). பூமியிலே சுவிசேஷ ஊழியம் பரவுவதற்கும், திருச்சபை கட்டப்படுவதற்கும் நாம் பொருளாதாரத்தில் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் நாம் உற்சாகமாக கொடுக்க வேண்டும். நாம் தேவனுக்கு எப்படி கொடுப்பது? கொடுப்பதைக் குறித்த தேவனுடைய திட்டத்தை வேதத்திலிருந்து காண்போம்.

**முறையாக கொடுங்கள்:** (Give Systematically)



தேவன் தம் மக்கள் முறையாக, திட்டமிட்டபடி கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் (1கொரி.16:2). கொடுப்பதில் எல்லோருக்கும் முறையாக ஆரம்ப அளவு 10 சதவீதம், இதை தசமபாகம் என்று அழைக்கிறோம். இது தேவனுடையது (லேவி.27:30; மத்.23:23). வேறு உபயோகத்திற்கு இந்தப் பணம் செலவிடப்பட்டால் அது தேவனிடமிருந்து திருடுவதாகும். இதனால் ஆசீர்வாதங்களை இழக்க நேரிடும். நம்முடைய முழு தசமபாகத்தையும் நாம் ஐக்கியம் வைத்திருக்கிற ஸ்தல சபையில் கொடுக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. (மல்.3:10) அங்கிருந்து வெவ்வேறு ஊழியத்திற்குப் பகிர்ந்தளிக்கப்படும். இது தேவனுடைய திட்டம். மேலும் நமது எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணவேண்டும் என்று வேதம் கூறுகிறது. இதற்கு கீழ்ப்படியும்போது தேவன் நம்மை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார் (நீதி.3:9,10).

**தியாகமாகக் கொடுங்கள்:** (Give Sacrificially)

ஒரு விதவை தன்னுடைய வாழ்விற்கு வைத்திருந்த இரண்டு காசுகளைக் கொடுத்ததைக் கண்டு இயேசு அவளை பாராட்டினார் (லூக்கா 21:1-4). மக்கெதோனியா சபை மக்கள் தங்களின் தரித்திரத்திலிருந்து கொடுத்தார்கள் (2 கொரி.8:2). நாம் எவ்வளவு கொடுத்தோம் என்பதைவிட எவ்வளவு உள்ளது என்பதை வைத்து தேவன் நம்முடைய கொடுத்தலை கணக்கிடுகிறார். தேவன் கொடுப்பவரின் உள்ளத்தையும் தியாகத்தையும் பார்க்கிறாரே தவிர கொடுக்கிற காணிக்கையின் அளவை அல்ல.

**மகிழ்ச்சியோடு கொடுங்கள்:** (Give Gladly)

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார் என்று வேதம் சொல்கிறது (2கொரி.9:7). கொடுக்க வேண்டுமே என்ற கட்டாயத்தோடும் கடமைக்காகவும் கொடுக்காமல் கர்த்தருக்குக் கொடுக்கிறோம் என்கிற நிச்சயத்தோடு சந்தோஷத்தோடு கொடுங்கள். ஐசுவரியமும் கனமும் தேவனாலே வருகிறது. நம்முடையதெல்லாம் தேவனால் உண்டாகிறது. அவருடைய கரத்தில் வாங்கி அவருக்கு கொடுக்கிறோம் (1நாளா.29:12-14). தாவீதின் நாட்களில் ஜனங்கள் ஆலயத்திற்காக மனப்பூர்வமாகவும் உற்சாகமாகவும் கர்த்தருக்கு கொடுத்தார்கள்.

தாவீது ராஜா மிகவும் சந்தோஷப்பட்டான் என்று வேதம் கூறுகிறது (1 நாளா.29:9). நாம் மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சியோடும் கொடுக்கும்போது நமது இயேசு ராஜா சந்தோஷப்படுகிறார்.

**தாராளமாகக் கொடுங்கள் :** (Give Generously)

தேவனுடைய வேலைக்குக் கொடுக்கும்போது பிசினித்தனமாகக் கொடுக்கக்கூடாது. நாம் எந்த அளவில் கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் (லூக். 6:38; 2கொரி.9:6). உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும் என்று வேதம் கூறுகிறது (நீதி.11:25).

**நன்றி உள்ளத்தோடு கொடுங்கள் :** (Give Gratefully)

தேவன் நமக்குச் செய்ததை நினைவில் கொண்டு நாம் அவருக்குக் கொடுக்க வேண்டும். தேவன் நம்மை நேசித்து, தம்மையே கொடுத்து நம்மை மீட்டெடுத்தார் என்று நாம் நினைத்துப் பார்ப்போம் என்றால் அவருடைய இந்த பெரிதான கிருபைக்கு முன்பாக நாம் செலுத்தும் தசமபாகமும் நமது காணிக்கையும் மிக சொற்பமாகத்தான் இருக்கும். We can never outgive God நன்றியறிதலுள்ள இருதயம் ஒரு கொடுக்கிற இருதயம் (2 கொரி.9:11,12). A thankful heart is a giving heart கொடுக்கிற சுபாவம் கிறிஸ்தவ வாழ்வின் மையமாக இருக்கிறது. ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் கொடுத்தலாகிய இந்த பரிசுத்த தெய்வீகப் பழக்கத்தைக் கற்றுக்கொள்வோம்! திருச்சபைக்கும் தேவ ராஜ்யத்திற்கும் ஆசீர்வாதமாக மாறுவோம்! தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம்!!

---

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும்**
**உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு:- காசோலை / டிராப்ட் எடுக்கும்போது

**Tamil District Council of SIAG** என்று எடுத்து

பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும்.

பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

**30, நாவலர் நகர், மதுரை - 625 016. போன் : 0452 2301165.**

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்

# இந்தியாவிற்காக ஜெபிப்போம்




- எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்படவும், தேவனை அறிவிற அறிவை அடைய....
- தேசத்தின் மேல், தேச தலைவர்கள் மேல் தேவ ஆளுகை உண்டாக...
- தேசத்தில் சமாதானம், அமைதி, பாதுகாப்பு உண்டாக...
- தேசத்தின் வறுமைமாற, ஆசீர்வாதம் உண்டாக..
- தேசம் தேவ கோபத்திலிருந்து காக்கப்பட....
- சபைகள் சுத்திகரிக்கப்பட, தேவ ஆவியானவர் ஊற்றப்பட, எழுப்புதல் உண்டாக...
- ஊழியர்கள் மத்தியில் ஒருமனம், ஐக்கியம், சகோதர அன்பு உண்டாக....
- தேசத்திற்க்காய் திறப்பில் நின்று ஜெபிக்கிற ஜெபசேனை எழும்ப, ஊழியர்கள் திரளாய் எழும்ப....
- வரவிருக்கிற 2019-ம் ஆண்டு பாரளுமன்ற தேர்தலுக்காக....
- தேசத்தின் ஆட்சியாளர்கள் இயேசுவை அறிந்து கொள்ள

மக்கள் தொகை : 136 கோடி
மாநிலங்கள் : 29
யூனியன் பிரதேசங்கள் :7
மொழிகள் : 1,652
இனங்கள் : சுமார் 4,635
ஜாதிகள் : சுமார் 1,169
நகரங்கள் : 5161
கிராமங்கள் : 7 இலட்சம்
எம்.எல்.ஏ. :4,120
லோக்சபா எம்.பி. :543
ராஜ்யசபா எம்.பி :233
குடியரசு தலைவர் : ராம் நாத் கோவித்
து. குடியரசு தலைவர் : வெங்கைய நாயுடு
பிரதமர் : நரேந்திர மோடி
தலைமை நீதிபதி : ஜக்தீஷ் சிங் கேஹர்
தலைமை தேர்தல் ஆணையர் : அசல்குமார் ஜோதி
இந்துக்கள் : 79.8%
இஸ்லாமியர்கள் : 14.2 %
கிறிஸ்தவர்கள் : 2.3%
சீக்கியர்கள் : 1.7%
புத்த மதத்தினர் : 0.7 %
ஜெயின் மதத்தினர் : 0.4
மற்றவர்கள் : 0.9%
அரசியல் கட்சிகள் : 464
தேசிய கட்சிகள் : 6
மாநில கட்சிகள் : 39
அங்கீகரிக்கப்படாத கட்சிகள் : 419
பாலியல் தொழிலாளர்கள் : சுமார் 8.6 லட்சம்
ஆண்டு வருமானம் : சுமார் 23லட்சம்கோடி
பின் தங்கிய மாவட்டங்கள் : 150
குழந்தை தொழிலாளர்கள் : சுமார் 1 கோடி
குடிசையில் வாழ்பவர்கள் : சுமார் 6.2கோடி
சுமார் 35% பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர்
சுமார் 20 கோடி பேருக்கு ஒருவேளை உணவு தான் கிடைக்கிறது.
சுமார் 42 கோடி பேர் தினக்கூலிகள்
காவல் நிலையங்கள் : சுமார் 15,555
நிலுவையிலுள்ள வழக்குகள் : சுமார் 2.7 கோடி
தீவிரவாத இயக்கங்கள் : சுமார் 66
பிச்சைக்காரர் : சுமார் 3,72,000
ஒரு ஆண்டிற்கு கொலைகள் :சுமார் 35,139
தற்கொலைகள் : சுமார் 1,31,666
கற்பழிப்பு : சுமார் 36,965
விபத்து மரணம் : சுமார் 4,51,757
வரதட்சணை மரணம் : சுமார் 8,501

# தமிழ்நாட்டிற்காக ஜெபிப்போம்

தமிழ்நாடு மாவட்டங்கள்




| | |
|---|---|
| தலைநகர் | சென்னை |
| மக்கள் தொகை | 7,21,47,030 |
| ஆண்கள் | 3,61,37,975 |
| பெண்கள் | 3,60,09,055 |
| நகரவாசிகள் | 3,72,29,590 |
| கிராமவாசிகள் | 3,49,17,440 |
| மாவட்டங்கள் | 32 |
| தாலுக்காக்கள் | 285 |
| பஞ். யூனியன் | 385 |
| பஞ். கிராமங்கள் | 16,564 |
| குக்கிராமங்கள் | 80,000 மேல் |
| மாநகராட்சி | 12 |
| நகராட்சி | 125 |
| எம்.எல்.ஏ | 234 |
| லோக்சபா எம்.பி | 39 |
| ராஜ்யசபா எம்.பி | 18 |
| முதலமைச்சர் | K. பழனிச்சாமி |
| கவர்னர் | பன்வாரிலால் புரோஹித் |
| தலைமை நீதிபதி | இந்திரா பானர்ஜி |
| தலைமை செயலர் | கிரிஜாவைத்தியநாதன் |
| டி.ஜி.பி | T.K.ராஜேந்திரன் |
| இந்துக்கள் | 87.58% |
| இஸ்லாமியர்கள் | 5.86% |
| கிறிஸ்தவர்கள் | 6.12% |
| சீக்கியர்கள் | 0.02 |
| புத்த மதத்தினர் | 0.01% |
| ஜெயின் மதத்தினர் | 0.12% |
| மற்றவர்கள் | 0.3% |
| அரசியல் கட்சிகள் | 60 |
| தேசிய கட்சிகள் | 5 |
| மாநில கட்சிகள் | 55 |
| மொழி | தமிழ் |
| மக்களினங்கள் | 518 |
| முக்கிய நகரங்கள் | 24 |
| பள்ளி மாணவர்கள் | 1,28,55,485 |
| கல்லூரிகள் | 2,337 |
| 2015 குற்றங்கள் | |
| கொலை | 1,835 |
| கற்பழிப்பு | 421 |
| ஆள் கடத்தல் | 1612 |
| வழிப்பறி | 1,786 |
| திருட்டு | 11,196 |
| வரதட்சணை மரணம் | 58 |
| விபத்து மரணங்கள் | 33,665 |
| தற்கொலைகள் | 15,777 |

- எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட, தேவனை அறிவிற அறிவை அடைய....
- தமிழ்நாட்டின் மேல், அரசியல் தலைவர்கள் மேல் தேவ ஆளுகை உண்டாக, நிலையான, லஞ்ச ஊழலாற்ற ஆட்சி அமைய.....
- தமிழ்நாட்டில் சமாதானம், அமைதி, பாதுகாப்பு உண்டாக.....
- தமிழ்நாட்டின் வறுமை மாற, ஆசீர்வாதம் உண்டாக.....
- தமிழ்நாடு தேவ கோபத்திலிருந்து காக்கப்பட....
- சபைகள் சுத்திகரிக்கப்பட, தேவ ஆவியானவர் ஊற்றப்பட, எழுப்புதல் உண்டாக....
- ஊழியர்கள் மத்தியில் ஒருமனம், ஐக்கியம், சகோதர அன்பு உண்டாக....
- தமிழ்நாட்டின் எழுப்புதலுக்காய் திறப்பில் நின்று ஜெபிக்கிற ஜெபசேனை எழும்ப....
- எல்லா கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட, தடைகள் மாற, ஜெபகுழுக்கள், சபைகள் ஸ்தாபிக்கப்பட....
- அதிகமாக நடக்கும் தற்கொலைகள் விபத்து, மரணங்கள் தடுக்கப்பட....



# விமர்சனங்களை கையாளுதல்

(Handling Criticism)




Rev. R. நெல்சன் ஞானகுமார்

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்


''உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்....'' (ஏசாயா 54:17).

“உன் மேல் குற்றஞ்சாட்டித் தீர்ப்புச் சொல்ல எழும் எந்த நாவையும் நீ அடக்கிவிடுவாய்” (நவீன மொழிபெயர்ப்பு).

## ஆக்கப்பூர்வ விமர்சனம் (Constructive Criticism)

ஒருவர் மீது உண்மையான அக்கறைகொண்டு, அவரை சிறந்தவராக மாற்றும் நோக்கத்தோடு நியாயமான சாதக மற்றும் பாதக கருத்துக்களை நட்பு முறையில் சொல்வது ஆக்கப்பூர்வ விமர்சனம்

ஆக்கப்பூர்வ விமர்சனத்தை கையாளுதல் :

**1. எதிர்பாருங்கள், அற்பமாக எண்ணாதிருங்கள்**

ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள் உங்கள் வளர்ச்சிக்கும் உதவும், உங்களை சிறந்த மனிதனாக மாற்றும். உங்களை ஆபத்திலிருந்து தப்புவிக்கும், உங்களை முதிர்ச்சியுள்ளவர்களாக்கும். (நீதி.12:1; 15:31,32).

**2.உங்கள் தவறுகளை ஒத்துக்கொள்ளுங்கள். சாக்குப்போக்கு சொல்லாதிருங்கள்**

நாம் எல்லாரும் மனிதர்கள் என்பதால், தவறு செய்வதற்கு ஏதுவானவர்கள். தவறு செய்பவர்களைவிட செய்த தவறுகளை உணராதிருப்பதுதான் ஆபத்து. பொதுவாகவே நாம் தவறு செய்யும்போது வக்கீலாகவும், பிறர் தவறுசெய்யும்போது நீதிபதியாகவும் மாறிவிடுவோம். வேதாகம உதாரணங்கள் : 1.நாத்தானிடத்தில் தாவீது (2 சாமு. 12:7-9,13), 2. யோபு (யோபு 6:24).

## அழிவுக்கேதுவான விமர்சனம் (Destructive Criticism)

ஒருவரை வேதனைப்படுத்தும் நோக்கத்தோடும், ஒருவருடைய கௌரவத்தை, புகழைக் கெடுக்கும் நோக்கத்தோடும் சொல்வது அழிவுக்கேதுவான விமர்சனம்.

நீங்கள் எவ்வளவு நன்றான காரியங்களை செய்தாலும் அதிலும் ஒரு குறை கண்டுபிடிப்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களை தவிர்க்கமுடியாது. ஒருவேளை 98 சதவீதம் பேர் உங்களைப் பாராட்டியிருப்பார்கள். 2 சதவீதமான பேராகிலும் உங்களை வேதனைப்படுத்துபடி பேச வாய்ப்பிருக்கிறது.

### அழிவுக்கேதுவான விமர்சனங்களுக்கான காரணங்கள்

**1. குற்றப்படுத்தும் ஆவி** (வெளி.12:10). சிலர் குற்றப்படுத்தும் ஆவிக்கு இடம் கொடுத்துவிடுகிறார்கள். எனவே என்ன செய்தாலும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டேயிருப்பார்கள்.

**2. தங்கள் தவறுகளை மறைக்க பிறரை குற்றப்படுத்துவார்கள் :** பெரும்பாலான நேரங்களில் அவர்கள் தவறுகளிலிருந்து கவனத்தை திருப்புவதற்காகவே பிறரை குற்றப்படுத்திக் கொண்டிருப்பார்கள்.

**3. காயப்பட்டவர்கள் பிறரை காயப்படுத்துவார்கள்** : (Hurt people hurt others) சிலர் தங்கள் காயங்களை ஆற்ற, பிறரை காயப்படுத்தி, அதில் சந்தோஷத்தை காண்பார்கள். இவர்களுக்கு தண்டனை அல்ல நமது அன்பே தேவை.

## அழிவுக்கேதுவான விமர்சனத்தை கையாளுதல்

**1. அமைதியாயிருங்கள் :** (Keep Silent)

இவ்விதமான விமர்சனங்களின்போது ஒன்றும் பேசாமல், செய்யாமலிருப்பதே சிறந்த கையாளுதலாகும். நீங்கள் கோபமடைந்து ஏதாகிலும் செய்தால் உங்களைக் குறித்த தவறான எண்ணம் உண்டாகும். நாணயம் எப்போதும் சத்தத்தை உண்டாக்கும். ஆனால் தாளினாலான பணமோ அமைதியாயிருக்கும். தாழ்மையோடு அமைதியாயிருக்கும்போது உங்களின் மதிப்பு கூடும். நீங்கள் பதிலுக்குப் பதில் பேசுவதினால் உங்களைத் தவறாக விமர்சிப்பவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களை உயர்த்துகிறீர்கள் என்றே பொருளாகிறது. வேதாகம உதாரணங்கள்: 1. சவுல் - 1 சாமுவேல் 10:27; 2. இயேசு மத்தேயு 27:12-14; 27:42; யோவான் 19:11

**2. உள் வாங்காதீர்கள் - உதறிப்போடுங்கள்**

அவர்கள் விமர்சித்து சொல்லும் வார்த்தைகளெல்லாம் உங்களுக்குள் வைத்திருந்தால், அது பகைமையாக, கசப்பாக மாறி பழிவாங்கும் செயலுக்கு நேராக நடத்தும், கோழிக்கறி சாப்பிடும்போது சதையை சாப்பிட்டு எலும்பை தூக்கி எறிவதுபோல இப்படிப்பட்ட தேவையற்ற விமர்சனத்தை உதறித் தள்ளுங்கள்.

ஒருவிசை ஒரு விரியன் பாம்பு ஒன்று பவுலின் கையைக் கவ்விக்கொண்டது (அப்.28:3-7). பவுலோ, அதை உதறிப் போட்டுவிட்டான். அதுபோல பிறர் சொல்லும் அழிவுக்கேதுவான விமர்சன வார்த்தைகளை உங்கள் உள்ளத்தில் வைத்திருந்தால் அது விஷத்தைப் போல உங்களை சேதப்படுத்திவிடும். எனவே உதறித் தள்ளுங்கள்.

**3. உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையில் கவனமாயிருங்கள் (நெகே. 6:3)**

யாரோ ஒருவர் உங்களை தேவையில்லாமல் விமர்சிப்பதை கேட்டு உங்கள் வேலையை, ஊழியத்தை விட்டு விடாதீர்கள். உங்களை விமர்சித்தவரோடு வாக்குவாதம் செய்து உங்கள் நேரத்தை, சக்தியை வீணாக்காதீர்கள். கார் பந்தயத்தில் ஜெயித்த ஒருவரிடம் நிருபர்கள், உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு அவர் சொன்ன பதில் என்னவென்றால், “நான் எப்போதும் சாலையில் கவனம் செலுத்துகிறேன். பக்கவாட்டில் கவனம் செலுத்துவதில்லை” என்றார்.

### 2018 கோடை விடுமுறை சீஷத்து பயிற்சி முகாம்கள் அறிக்கை

| | |
|---|---|
| கோடை விடுமுறை சீஷத்துவ பயிற்சி முகாம்கள் | 54 |
| மொத்த மாணவர்கள் | 5263 |
| இரட்சிப்புக்கு ஒப்புக்கொடுத்தவர்கள் | 1629 |
| ஞானஸ்நானத்திற்கு தீர்மானித்தவர்கள் | 1388 |
| அபிஷேகம் பெற்றவர்கள் | 1718 |
| முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்தவர்கள் | 1592 |
| மிஷனரி ஊழியத்திற்கு அர்ப்பணித்தவர்கள் | 622 |
| பள்ளி கல்லூரிகளில் ஜெபக்குழு ஆரம்பிக்க தீர்மானித்தவர்கள் | 1752 |

## BEATITUDES FOR MARRIED COUPLES

Ephesians 5:22-33; Colossians 3:12-19; 1 Peter 3:1-9



1. BLESSED are the husband and wife who continue to be affectionate, considerate, and loving after the wedding bells has ceased ringing.
2. BLESSED are the husband and wife who are as polite and courteous to one another as they are with their friends.
3. BLESSED are they who have a sense of humour; for his attitude will be a handy shock absorber.
4. BLESSED are the married couples that abstain from worldly vices and influences.
5. BLESSED are they who love their spouse more than any other person in the world, and who joyfully fulfil their marriage vow of lifetime fidelity and mutual happiness.
6. BLESSED are they who remember to thank God for their food before they partake of it, and who set aside some time each day for the reading of the Bible and prayer.
7. BLESSED are they that attain parenthood, for children are a heritage of the Lord.
8. BLESSED are the husband and wife who never speak loudly to each other and who strive to make their home a place "where seldom is heard a discouraging word."
9. BLESSED are the husband and wife who faithfully attend worship service of the church for the advancement of Christ's kingdom.
10. BLESSED are the husband and wife who can work out their problems of adjustment without interference from relatives and friends.
11. BLESSED are the husband and wife who have a complete understanding about financial matters and who have worked out a perfect partnership with all the money under control of both.
12. BLESSED are the husband and wife who humbly dedicate their lives and their home to Christ and practice His teachings in their home by being unselfish, loyal, and loving.

- AUTHOR UNKNOWN



# உண்மையும், விவேகமுமுள்ள ஊழியக்காரன்

**Rev. I. அலெக்ஸாண்டர்**
விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்

எஜமான் வைத்த உண்மையும், விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? மத்.24:45

கர்த்தர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அன்று தேவன் ஈசாக்குக்குத் தரிசனமாகி... "என் **ஊழியக்காரனாகிய ஆபிரகாமினித்தம்** உன்னை ஆசீர்வதிப்பேன் என்றார் (ஆதி.26:24). எலியா பாகால் தீர்க்கதரிசிகள், தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகளுக்கு முன் சவால் விட்டு ஜெபத்தை ஏறெடுக்கும்போது" இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும் **நான் உம்முடைய ஊழியக்காரன்** என்றும், நான் இந்தக் காரியத்தையெல்லாம் உம்முடைய வார்த்தையின்டி செய்தேன் என்றும் இன்று விளங்கப்பண்ணும் என்றான். அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கியது. ஜனங்களெல்லாரும் முகங்குப்புற விழுந்து கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள் (1 ராஜா.18:36-39).

இந்தப் புஸ்தகத்திலுள்ள வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங் கூட நானும் **ஒரு ஊழியக்காரன்** என்று வெளி.22:9-ல் வாசிக்கிறோம். தேவனுக்கு ஊழியஞ்செய்கிற ஆயிரமாயிரமான ஊழியர்களோடு கூட "**நானும் ஒரு ஊழியக்காரன்** என்று கூறமுடியுமா? தேவனுக்கென்று ஊழியம் செய்கிற நாம், "**நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்**" (1 கொரி.11:31). நாம் எப்படிப்பட்ட ஊழியக்காரனாய் இருக்க தேவன் விரும்புகிறார்? வேதம் நமக்குப் போதிக்கும் சத்தியம் என்ன? நாம் யாருடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டும்? நாம் மாதிரிகளாக இருக்கிறோமா? போன்ற கேள்விகளைக் கேட்டு நம்மை நாமே நிதானித்து தேவனுடைய ராஜ்ஜியத்தில் சிறந்த ஊழியராக விளங்க தேவன் கிருபை செய்வாராக.

மோசேயைக் குறித்த சாட்சி:நாம் யாவருமே தேவனால் அழைக்கப்பட்டவர்கள். அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட ஆசாரிய கூட்டம் தான் நாம், பரிசுத்த ஜாதிதான் நாம், அவருடைய சொந்த ஜனம்தான் நாம். நாம் எப்படிப்பட்ட சாட்சியுடையவர்களாயிருக்கிறோம்? கர்த்தர் மோசேயை தமக்கு ஊழியம் செய்ய அழைத்தார். எபி.3:5-ல் "...மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் என்றும், எபி.3:6-ல் கிறிஸ்து உண்மையுள்ளவராயிருக்கிறார் என்றும் வாசிக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய உண்மையின் அளவு எப்படி?

இரட்சிக்கப்பட்ட தேவ ஜனமே! நாம் யாவரும் தேவனுக்கு பல நிலைகளில் ஊழியம் செய்கிறோம். நம்மை நாம் சீர்தூக்கிப் பார்ப்போம். மோசே பெரிய தலைவன். ஆனால் ஆவியானவர், மோசே பணிவிடைக்காரனாய் இருந்தான் என்று கூறுப்பிடுகிறார். இது தாழ்மையைக் குறிக்கிறது. இயேசு இந்த உலகத்தில் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்ய வந்தார். யோவான் 13:14-ல் ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுங்கள் என்றார்.

வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு வார்த்தைகளை நினைவில் கொண்டுவர விரும்புகிறேன்.

**1. ஆசாரியன் : பிரித்தெடுக்கப்பட வேண்டியவன்.** “உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு..... இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துக்கொள்” (யாத்.28:1). பழைய ஏற்பாட்டில் விரும்புகிற எல்லோருமே ஆசாரியராக முடியாது. லேவி கோத்திரத்தில் பிறந்திருக்க வேண்டும். யாத்.32:26-29 வசனங்களை வாசிக்கும்போது லேவியர்கள் மோசேக்கு கர்த்தருடைய பட்சத்தில் இருந்தபடியால் ஆசாரிய ஊழியம் கொடுக்கப்பட்டது. எபி.5:4-ல் “மேலும், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை” என்று வாசிக்கிறோம். எண்.25:6-13 வசனங்களில் ஆரோனின் குமாரனான எலெயாசரின் மகன் பினெகாஸ் பக்தி வைராக்கியம் காண்பித்ததினால் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். மேலும் இஸ்ரவேல் கோத்திரங்களை எண்ணிப் பார்ப்பீர்களாக என்றபோது லேவி கோத்திரத்தை மாத்திரம் எண்ணாமலும், இஸ்ரவேல் புத்திரத்திற்குள்ளே அவர்கள் தொகையை ஏற்றாமலும், லேவியரைச் சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதனுடைய சகல பணிமுட்டுகளுக்கும், அதிலுள்ள சமஸ்த பொருள்களுக்கும் விசாரிப்புக்காரராக ஏற்படுத்து என்றார் (எண். 1:47-54).

**2. ஊழியக்காரன் :** நாம் தேவனுடைய ஊழியக்காரர்கள். அதாவது தேவனுடைய வேலைக்காரர்கள். நாம் தேவனுடைய வேலையை செய்யும்படி அழைக்கப்பட்ட வேலைக்காரர்கள். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவன் ஒப்புவித்த வேலையை செய்து நிறைவேற்ற வேண்டியது நம்முடைய கடமை. எனவே உண்மையுள்ள ஊழியனாய் கிரியை செய்து கடமையை நிறைவேற்றுவோம்.

நாம் உண்மையும், விவேகமும் உள்ள ஊழியக்காரனாய் (மத்.24:45). உத்தமும் உண்மையுமுள்ள, ஊழியக்காரராய் (மத்.25:21). எஜமான் வரும்போது விழித்திருக்கிற ஊழியக்காரராக (லூக்கா 12:37) எஜமானுடைய சித்தம் செய்கிற ஊழியராய், ஆயத்தமுள்ள ஊழியக்காரனாய் (லூக்கா 12:47) தேவனை பின்பற்றுகிற அவரோடு இருக்கிற ஊழியக்காரனாய் (யோவான் 12:26). நீதியை செலுத்துகிற ஊழியக்காரனாய் (ரோமர் 13:4). தேவனைப் பிரியப்படுத்தும் ஊழியக்காரனாய் (கலா. 1:16). வெட்கப்படாத ஊழியக்காரராய் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாக, தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்த ஜாக்கிரதையுள்ள ஊழியக்காரனாக (2 தீமோ.2:15). இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாய், சண்டைபண்ணாத ஊழியக்காரனாய் (2 தீமோ.2:24). அவரைத் துதிக்கும் ஊழியக்காரனாய் (வெளி.19:5; சங்.113:1) அவருடைய சமுகத்தை தரிசிக்கும் ஊழியக்காரராய் (வெளி.22:4) காணப்பட தேவ ஆவியானவர் நமக்கு உதவி செய்வாராக. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரருக்குத்தான். இரகசியங்களை வெளிப்படுத்துவார் (ஆமோஸ் 3:7). அன்று செருபாபேலை நோக்கி: செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன். நான் உன்னைத் தெரிந்து கொண்டேன் என்று உரைத்ததுபோல நாமும் சாட்சி பெறுவோம்.

முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளை சிந்திக்க வேண்டாம். இதோ. நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் (ஏசாயா 43:18,19) என்றவர் நம் வாழ்க்கையிலும் புதிய காரியத்தை செய்வாராக.



# ஒருமனமாய் இருங்கள்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர்,
சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

இதோ! சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது (சங்கீதம் 133:1).

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்ற பரிசுத்த ஆவிபெற்ற அனைவரும் கிறிஸ்துவுகுள் சகோதர, சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணவேண்டுமானால் அனைவருக்குள்ளும் ஒருமனம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அன்பு ஐக்கியம் இருக்கும். அன்பு, ஐக்கியம், ஒருமனம் இது மிகவும் முக்கியம். யாக்கோபு 1:8-ல் ஒரே மனுஷனுக்குள்ளாக இரண்டு மனம் இருக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. எலியா சொல்லும்போது இரண்டு நினைவுகளால் குந்திகுந்தி நடக்கிறார்கள் என்று இருக்கிறது. ஒரு விசுவாசிக்குள்ளாக ஒரே மனம் ஒரே இருதயம் இருக்க வேண்டும். நாம் ஒரே இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கிறோம். ஒரே ஆவியினால் தாகம் தீர்க்கப்பட்டிருக்கிறோம். வெவ்வேறு குடும்பங்களிலிருந்து வந்திருந்தாலும் அதையெல்லாம் மறந்துவிட்டு சபையில் மட்டுமல்ல. வெளியில் செல்லும்போதும் வீட்டிலும் வேலை ஸ்தலத்திலும் நீங்கள் அனைவரும் அந்த எண்ணத்தோடுதான் பழகவேண்டும்.

சங்கீதம் 133:1-ம் வசனத்தில் சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணும்போது தான் நன்மையும் கிடைக்கிறது. நமக்கு இன்பமும் கிடைக்கிறது. இந்த இன்பம் உலகத்திற்குரியதல்ல இது பரலோகத்திலிருந்து வருகிற பேரின்பம். அப்படிப்பட்ட பேரின்பத்தால் நம்முடைய உள்ளத்தை நிரப்புகிறார். ஆகவே தேவசமூகத்திலிருக்கிற ஒவ்வொருவரும் மிகவும் சந்தோஷத்தோடு இருக்க வேண்டும். அநேகர் ஆசீர்வாதத்தை இழந்துபோக காரணம் என்னவென்றால் அவர்கள் மற்றவர்களோடு அன்பாக ஐக்கியமாக இருப்பதில்லை. வேதத்தில் தன் சகோதரனைப் பகைக்கிறவன் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான் என்று சொல்லப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் கொலை செய்தால்தான் நியாயத்தீர்ப்பு, ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பகைத்தாலே நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பீர்கள். ஆகவே சகோதர சிநேகம் உங்களில் நிலைத்திருக்கக் கடவது. சகோதர சிநேகம் நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது. சகோதரர்களுக்குள்ளே மனக்கசப்பு தவறான எண்ணங்கள் இருந்தால் அது ஆசீர்வாதத்திற்கு தடையாக அமைந்துவிடுகிறது. உங்களை நீங்களே ஆராய்ந்து பார்த்து ஒருவரோடு ஒருவர் அன்பு ஐக்கியம் வைத்திருக்க வேண்டும். அப்பொழுது ஆசீர்வாதத்தையும் நன்மையையும் கட்டளையிடுகிறார்.

சங்கீதம் 133:2-ஆம் வசனத்தில் அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின் மேல் முழுவதுமாக நிரப்பிவிடுகிற தைலத்திற்கு ஒப்பாகயிருக்கிறது. இந்த

அபிஷேக தைலம் உங்கள் தலையிலேயிருந்து உடல் முழுவதையும் நிரப்புகிறது. மனிதனுக்கு தலை மிகவும் முக்கியம். நம்முடைய நினைவுகள் தலையிலிருந்துதான் வருகிறது. பரிசுத்த ஆவியானவர் தலையை நிரப்பும்போது நம்முடைய நினைவுகள் முழுவதுமாக மாற்றப்படுகிறது. பிறகு கண்கள் மிகவும் முக்கியமானது. கண் பார்க்கிற பார்வை சரியானதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் மாம்சத்தின் இச்சைபோன்ற தவறான காரியங்கள் உண்டாகிய பின்பு பாவம் உண்டாகிறது. பாவம் மரணத்தைத் கொண்டு வருகிறது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் நம் கண்களை நிரப்பும்போது நாம் பார்க்கிற பார்வை சரியான பார்வையாக மாறுகிறது. ஆகவே நம்முயை கண்களில் இந்த பரிசுத்த ஆவியானவர் இறங்குவதற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். கண்களில் கட்டுப்பாடு இல்லாததனால் தான் சிம்சோன் கண்களை இழந்து சிறைச்சாலையில் மாவரைத்தான். தேவனுடைய நியாயாதிபதியாயிருக்க வேண்டியவன் அநேருக்கு கேலிப்பொருளாக மாறினான்.

சங்கீதம் 133:3-ஆம் வசனத்தில் எர்மோன் மேலும் சீயோன் பர்வதம் மேலும் இறங்கும் பனிக்கு ஒப்பாயிருக்கிறது. வசனம் பனிபோல் வந்திறங்கும்போது சந்தோஷம் மட்டுமல்ல மற்றவர்களுக்கு இந்த வேத வசனத்தை அறிவிக்கவும் அது நம்மை ஏவுகிறது. உபாகமம் 32:1-3 பனித்துளிகள் புல்லின் மேல் இறங்குவதைப் போல என் வசனம் இறங்கும். இந்த வசனம் நமக்குள் இறங்கும்பொழுது நமக்குள்ளே சந்தோஷம் சமாதானமும் பெருகுகிறது. பிற்பாடு நம்மால் அமைதியாக இருக்கமுடியது. நாம் அதை மற்றவர்களுக்கு அறிவிக்க அது நம்மை ஏவுகிறது. இந்த பனி நம்மேல் விழுந்து நம்மை மலரச் செய்வது மாத்திரமல்ல தேவனுக்குள் நம்மை கனிகொடுக்க வைக்கிறது.

நாம் அதிகமாக நம்முடைய ஆசீர்வாதத்திற்காகதான் ஜெபிக்கிறோம். ஜெபிப்பதினால் மட்டும் நமக்கு ஆசீர்வாதம் கிடைத்துவிடாது. ஆசீர்வாதம் நமக்கு வேண்டுமனால் நமக்குள் ஒருமனம் சகோதர சிநேகம் இருக்க வேண்டும். அவருடைய வார்த்தையின்படி வாழ வேண்டும். அப்பொழுதுதான் தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும். ஆமென்.

---

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484

# 7 G's Of Soul-Winning in Psalms 126:6

*He who continually goes forth weeping, bearing seed for sowing, shall doubtless come again with rejoicing, bringing his sheaves with him.*

1. **GOING-**"He who continually GOES FORTH ..."

   We need a heart for going. We need to think about unsaved people. We need a habit of going. You will never win souls to Christ unless you get into a regular habit of going. Cf. Mark 16:15.

2. **GROANING-**"... and WEEPING ..."

   This is a weeping in a perception of the lost, in prayer for the lost, and in presenting the gospel to the lost! Cf. Luke 19:31; Acts 20:31; Jeremiah 9:1;Matthew 9:36

3. **GIVING** OUT THE GOSPEL- "... bearing precious seed for SOWING..."

   If we can make a practice of giving out the gospel, it will keep us giving out the gospel. Distribute tracts, share your testimony. Soul-winning is action, but it should also be a part of your life.

4. **GUARANTEE-**"... shall DOUBTLESS come again ..."

   The guarantee of a thrill will motivate a child to go to an amusement park. The guarantee of catching fish will motivate a fisherman to a pond or lake. The guarantee of conversions should motivate a Christian to go soul-winning!

5. **GLADNESS-** "... shall doubtless come again with REJOICING ..."

   There is JOY in soul-winning!This is a "side benefit". We should win souls because it is RIGHT. We should do it because we love God. We should do it to keep people out of hell. However joy is still one of the promises of soul-winning. Soul-winning produces joy in the soul-winner, joy in the convert, and joy in heaven!

6. **GROUP-**"... bringing his SHEAVES with him."

   It should motivate us to realize that someday we will all join one another in heaven as a converted group and a close group. We're now in the same family!

   The final "G" that is a powerful motivation in soul-winning is:

7. **GOD-** Psalms 126:3 The LORD has done great things for us

   God is concerned about soul-winning. God came to earth as the man Christ Jesus to seek and save the lost. God commissioned us to this work. It is not God's suggestion; it His command for us to win souls! And He himself completes the task of conversion, using us as a tool!

Let these SEVEN G'S OF SOUL-WINNING propel you into the fields!

# சாரா டக்கர்



பாளையங்கோட்டைக்குப் போனீர்கள் என்றால் அங்கு சாரா டக்கர் கல்லூரி, சாரா டக்கர் ஹையர் செக்கண்டரி ஸ்கூல், சாரா டக்கர் டிரெய்னிங் ஸ்கூல்,.... என்ற பலகைகளைப் பார்க்கலாம்...

உங்களுக்கு தெரியாமலும் இருக்கலாம்...

இங்கிலாந்து தேசத்தில் இரண்டு கால்களும் முடமான, தன் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாதபடி, அடைக்கப்பட்டிருந்த ஒரு பெண் இருந்தாள்... அவளால் ஒன்று தான் செய்ய முடியும். ஒரு சாதாரண வீல் சேர்ல ஆலயத்துக்கு செல்வாள். அப்போல்லாம் இப்போ உள்ள மாடர்ன் வீல் சேர் கிடையாது.

ஒரு நாள் தென்னிந்திய மிஷனரி அந்த ஆலயத்தில் பேசினார். தென் இந்தியாவில் பெண் பிள்ளைகள் படிக்க முடியாத சூழ்நிலைகளையும், சமுதாயக் கட்டுப்பாடுகளையும், பெண்களை சிறு வயதிலே கோயிலுக்கு பொட்டுக் கட்டி, விட்டு வாழ்நாளெல்லாம் விபச்சாரி ஆக்கப் படுகிறார்கள் என்று அழுகையோடு சொன்னார். பெண்கள் படிப்பது கேவலம் என்று கருதுகிறார்கள் என்றார்.

நொறுங்கிய மனதுடன் வீட்டுக்கு வந்தாள் சாரா. அவளுக்கு 20 வயது இருக்கலாம். அவளின் அப்பாவின் பெயர் டக்கர்.

அவள் ஆண்டவரிடம் சொன்னாள், 'ஆண்டவரே எனக்கு இந்தியாவிற்கு போக ஆசையாய் இருக்கிறது. ஒவ்வொரு வீடாகக் கதவைத் தட்டி உங்கள் பிள்ளைகளைப் படிக்க வையுங்கள் என அந்தப் பெற்றோரின் காலில் விழுந்து கெஞ்ச வேண்டும் போல் இருக்குது.'

அறிவுக் கண்ணைத் திறந்தால் தானே ஒளி வரும். அவளுக்கு ஒன்று தோன்றியது. அவள் இந்தியாவைப் பார்த்ததில்லை. திருநெல்வேலி மக்களைப் பார்த்ததில்லை. திருநெல்வேலி மக்களுக்காக ஏங்கினாள். அவள் உறவினரிடம் இது பற்றி சொன்னாள். அவள் தன் பிறந்த நாளைக் கொண்டாடவில்லை. அதற்கு பதிலாக பணமாகத் தாருங்கள் என்று பணத்தை சேர்த்தாள். இரு ஆடைகளுக்கு மேல் அவள் வாங்கவில்லை. ஒரு நாள் அந்த மிஷனரிக்குப் பணத்தை அனுப்பி வைத்தாள் சாரா. அதில் உருவாகியது தான் சாரா டக்கர் ஸ்தாபனங்கள்.

இன்று 4000 பிள்ளைகள் படிக்கும் பெரிய ஸ்கூலாக கல்லூரியாக கம்பீரமாக நிற்கிறது. அவள் இந்தியாவிற்கு வரவில்லை. திருநெல்வேலிக்கும் வரவில்லை.

அதில் படிக்கும் ஒவ்வொருவரும், சொல்வது, "நான் சாரா டக்கர் மாணவி" என்று பெருமையாகச் சொல்லுகிறார்கள்... அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்...



# இளைய சமுதாயம் சந்திக்கும் 3D பிரச்சனைகள்

Rev. லின்ஸி ஜோன்ஸ் (President, CA)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, இந்த வாலிபர் பகுதியின் மூலம் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இன்றைய இளம் தலைமுறையினரோடு தொடர்புகொள்வதிலும், குறிப்பாக பின்மாற்றதலிருக்கும் சபை வாலிபர்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்தவும் பின்வரும் மூன்று காரியங்கள் கவனிக்கபடவும், மாற்றப்படவும் வேண்டும். இளம் தலைமுறையிடம் கண்டு, சீரமைக்கப்பட வேண்டிய மூன்று 'D'க்கள் உண்டு. முதலாவதாக.

**1.DISAPPOINTMENTS** (ஏமாற்றங்கள்) :

பத்து வருடங்களுக்கு முன்புள்ள இளைய தலைமுறை எடுத்து கொண்டதை விட இன்றைய இளைய தலைமுறை ஏமாற்றங்களை மிக ஆழமாக உள்வாங்குகின்றனர். படிப்பு, வேலை, குடும்பம், நண்பர்கள், பழக்கவழக்கங்கள் என பலநிலைகளில் வாலிபர்களின் மனோபாவம் மாறுபடுகிறது. இதில் ஏதாவது ஒன்றில் அவர்கள் எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும்போது அது மிகப் பெரும் ஏமாற்றமாய் மாறி அவர்களை முற்றிலும் வேறு திசையில் பயணிக்க வைக்கிறது. ***Some health issues related to disappointments are anxiety, rapid shifts in emotions excessive need for admiration.***

**2.DISCOURAGEMENT** (ஊக்கமின்மை)

இந்நிலை இன்றைய வாலிப தலைமுறையிடம் பரவலாக காணப்படும் நிலையாகும். இது ஒரு வாலிபனை செயல்பட முடியாத தேக்கநிலையில் வைத்துவிடுகிறது. ஊக்கமின்மை பல காரணங்களால் ஏற்படும். அதில் முக்கியமானவை :

1. தன்னால் ஏற்படும் ஊக்கமின்மை : - இது, தான் செயல்படுத்த நினைத்தவைகளை செயல்படுத்த முடியாததால் ஏற்படும் ஊக்கமின்மை.

2. பிறரால் ஏற்படும் ஊக்கமின்மை : - இது, பிறர் எதிர்பார்த்த நிலையில் தன்னால் செயல்பட முடியாததால் ஏற்படும் ஊக்கமின்மை. இவ்விரண்டு வகை ஊக்கமின்மைக்கும் அவர்களை உற்சாகப்படுத்துவதே சரியான தீர்வாக அமையும். எவ்விதத்தில் மற்றும் எக்காரியத்தில் ஊக்கமின்மை ஏற்பட்டது என கண்டறிந்து செயல்படுத்தினால் வாலிபர்களை சபையில் உந்து சக்தியாக மாற்ற இயலும்.

**3. DEPRESSION** (மன அழுத்தம்)

இன்றைய வாலிபர்கள் சந்திக்கும் மூன்றாவது 'D' DEPRESSION ஆகும். இது மூன்றாவது நிலையே ஆகும். முதல்நிலையாகிய 'ஏமாற்றம்' கவனிப்படாத பொழுது அது 'ஊக்கமின்மை' ஆக மாறுகிறது. இந்த இரண்டாம் நிலை தொடரும்போதுதான் அது 'மன அழுத்தமாக' மாறுகிறது. மன அழுத்தம் ஏற்படுகிறபோது ஒரு வாலிபன் எதிலும் ஆர்வமற்றவனாகவும் மாறுகிறான். இதிலிருந்து வெளிவரவே தவறான போதை பழக்கவழக்கங்களுக்கும், தவறான உறவுகளுக்கும் நேராக வாழ்வை திசை திருப்புகிறான்.

ஒரு குடும்பமும், சபையும் இம்மூன்றையும் கவனித்து செயல்படுமாயின் நம் சபையின் வாலிபர்கள் மீட்டெடுக்கபடவும், தேவசித்தம் அவர்களில் செயல்படவும், வருங்காலங்களில் அவர்கள் சபைக்கும்,சமுதாயத்திற்கும் தூண்களாக மாறவும் தேவன் உதவிசெய்வார். ஆமென்



# உங்கள் பொக்கிஷங்களை பரலோகத்தில் சேருங்கள்

**Rev. பெகின் சாமுவேல் (AGCM Director)**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். ஒரு நீண்ட விடுமுறைக்குப்பின் உங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பி வைத்திருப்பீர்கள். இக்கல்வியாண்டு உங்கள் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாக அமைய ஜெபிக்கிறேன். எல்லா மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய வாழ்த்துதலை இவ்விதழ் மூலமாக தெரிவிக்கிறேன்.

பெற்றோர்கள் தங்களுடைய வாழ்நாளில் கஷ்டப்பட்டு சம்பாதிப்பது, பிரயாசப்படுவது, சேர்த்து வைப்பது எல்லாமே தன்னுடைய பிள்ளை வாழ்ந்து சுகித்திருக்க வேண்டும் என்பதற்காக. அதற்காக அவர்கள் இவ்வுலகில் எடுக்கும் முயற்சிகள் பல. ஆனாலும் ஆவிக்குரியவர்களாகிய நாம் பொக்கிஷங்களை இவ்வுலகத்தில் அல்ல. பரலோகத்தில் சேர்த்து வைக்க வேண்டும் என்று வேதம் நமக்கு தெளிவாக கூறுகிறது. பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். (மத்.6.20) இங்கு நாம் சேமித்து வைக்கும் பொக்கிஷங்கள் அழிவுக்குரியவை. எனவே நாம் நம்முடைய பொக்கிஷத்தை அழிவில்லாத பரலோகத்திலே சேர்த்து வைக்க பிரயாசப்படுவோம். பெற்றோருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றோர்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (2 கொரி. 12.14).

என்னென்ன காரியங்களை செய்வதன் மூலம் பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்து வைக்க முடியும் என்று இவ்விதழில் நாம் பார்ப்போம். 1தீமோ.6:18,19 வசனங்களில் இவ்வாறு வாசிக்கிறோம். நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு.

## 1. உங்கள் பிள்ளைகளோடு நேரம் செலவிடுங்கள்

மோசேயை அவனுடைய தாயார் தன்னோடு வைத்து வளர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் அந்நாட்களில் செய்து அவனோடு நேரம் செலவழித்தார்கள். அதனால்தான் அவன் அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதை வெறுத்து கிறிஸ்துவுக்காக வாழ்ந்தான் (எபி.11:24,25) சிம்சோனை மனோவாவுக்கும், அவனுடைய மனைவிக்கும் கொடுக்கும்போது தேவன் சில கட்டளைகளைக் கொடுத்து அவனை வளர்க்க சொல்லியிருந்தார். இன்றும் அநேக பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக சம்பாதிக்கிறோம், சேர்த்து வைக்கிறோம் என்று நினைத்து அவர்களுடன் நேரம் செலவிடுவதே இல்லை. எவ்வளவு பிஸியாக இருந்தாலும் கிடைக்கும் நேரத்தில் T.V. Smart phone என்று நேரத்தை விரயம் செய்யாமல் அந்த நேரத்தை பிள்ளைகளுடன் செலவிடுங்கள். உங்கள் பிள்ளைகளுடன் நேரம் செலவிடுவதை விட்டு விடாதிருங்கள்.

## 2. உங்கள் பிள்ளைகளுக்கு விசுவாசத்தை ஊட்டுங்கள்

தீமோத்தேயு என்னும் பிள்ளைக்கு அவனுடைய பாட்டியாகிய லோவிசாள் தேவன் மேலுள்ள விசுவாசத்தை அவர்கள் பிள்ளையாகிய ஐனிக்கேயாளுக்கு கொடுத்து அவர்கள் தன் பிள்ளையாகிய தீமோத்தேயுவுக்கு கொடுத்ததின் மூலம் தேவனாலும், பரிசுத்தவான்களாலும் பாராட்டப்படத்தக்க சிறந்த ஊழியனாய் மாறினான். நாமும் நம் பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே தேவன் மேல் அசைக்க முடியாத விசுவாசத்தை கொடுப்போம். அந்த விசுவாசம் பின்னாட்களில் மிகப்பெரிய பலனை உங்களுக்காக சேர்க்கும்.

## 3. உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள்

அன்னாள் அவளுடைய பிள்ளையாகிய சாமுவேலை கர்த்தருக்காக கொடுத்தாள். ராஜாக்களை அபிஷேகம் பண்ணும் தீர்க்கதரிசியாக தேவன் அவனை உயர்த்தினார். அதுபோல மரியாள் தன் பிள்ளையாகிய இயேசுவை உலக இரட்சகராக தியாகம் பண்ணினாள். பாக்கியவதி என்று அனைவராலும் அழைக்கப்பட்டாள். மேலும் ஆபிரகாம் தன்னுடைய ஏகபுத்திரனாகிய ஈசாக்கை கர்த்தருக்காக ஒப்புக்கொடுக்க துணிந்தான். தேவன் அவனுடைய சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போல பெருகப்பண்ணி ஆசீர்வதித்திருக்கிறார். தேவனுக்காக பிள்ளைகளை ஒப்புக் கொடுத்தவர்கள் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாதத்தை பெற்றிருக்கின்றனர். எனவே நீங்களும் உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அதன் மூலம் நீங்கள் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறீர்கள்.

இதை வாசிக்கிற பெற்றோர்களே, நீங்கள் விதைக்கும் ஒவ்வொன்றையும் தேவன் கணக்கிலே வைத்திருக்கிறார். நீங்கள் பிள்ளைகளுக்காக செலவிடும் நேரம், செலவழிக்கும் பணம், கொடுக்கும் விசுவாசம் எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளைகளையே முதலீட்டாக கொடுப்பதன் மூலம் நீங்கள் உங்களுக்குரிய பொக்கிஷத்தின் ஆசீர்வாதத்தை அடைவீர்கள்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

## மண்டலத் தலைமைப் போதகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

உங்கள் மண்டலங்களில் மண்டல அளவில் நடக்கும் நிகழ்ச்சிகளின் புகைப்படங்களை எங்களுக்கு அனுப்பித் தாருங்கள். நம்முடைய பத்திரிக்கையில் தேர்ந்தெடுத்து பிரசுரிக்க வசதியாக இருக்கும். நன்றி.

**மின்னஞ்சல் (E-Mail) மூலமாக பரிபூரண ஜீவன் பத்திரிக்கை படிக்க விரும்புவோர் எங்களது Mail ID-யில் தொடர்பு கொள்ளவும்**

**ag.paripooranajeevan@gmail.com**

---

# தீர்க்கதரிசனம்

தீர்க்கதரிசனம் என்பது முன்னறிவித்தல். தீர்க்கதரிசன வரத்தில் நடந்து கொண்டிருப்பதை அறிவிப்பதும் நடக்க இருப்பதை அறிவித்தலும் அடங்கும் (Forth-telling and Fore-telling). தீர்க்கதரிசிகள் தேவனுடைய வாயாக இருந்து தேவனுக்காகப் பேசுகின்றனர். அவருடைய செய்தியை அறிவிக்கின்றனர். சில நேரங்களில் தீர்க்கதரிசனம் எதிர்காலத்தைக் குறித்து அறிவிக்கும்.

## தீர்க்கதரிசனம் பல வழிகளில் செயல்படுகிறது

1. நீங்கள் பரிசுத்த ஆவியில் நிறையப்படும்போது. லூக்கா 1:67.
2. அபிஷேகம் நிறைந்தவர்களிடத்தில் பரிசுத்த ஆவி கிரியை செய்யும்போது. 2 பேதுரு 1:21.
3. உண்மையாக ஆராதிக்கும் போது - 1 சாமு. 10:5-6.
4. தேவனுடைய மனிதர்கள் உங்கள் மேல் கைகளை வைக்கும் போது. அப். 19:6.
5. வார்த்தையின் மூலமாகவும், அன்னியபாஷையின் மூலமாகவும் மற்றும் வியாக்கியானத்தின் மூலமாகவும். சங். 39:3.
6. தரிசனங்கள் மூலமாகவும். அப். 21:11.
7. கனவுகளின் மூலமாகவும். ஆதி. 37:5-11.

## தீர்க்கதரிசனத்தை ஐந்து பிரிவாகப் பிரிக்கலாம்

1. தனி மனிதனுக்குச் சொல்லப்படுவது. 1 இராஜா. 13:2. யோசியா ராஜாவின் பிறப்பு மற்றும் இராஜ்ஜியத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டது. 2 இராஜா 23:15-17, நிறைவேறியது.
2. குடும்பத்திற்குச் சொல்லப்படுவது. ஆதி. 12:2. உன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்று ஆபிரகாமுக்குத் தீர்க்கதரிசனம் கிடைத்தது. அது நிறைவேறிக் கொண்டிருக்கிறது.
3. தேசத்திற்குச் சொல்லப்படுவது. யோனாவின் மூலமாக நினிவேக்குத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. யோனா புத்தகம்.
4. உலகத்திற்கு உரைக்கப்படுவது. அப்.11:28. தீர்க்கதரிசியினால் உலகம் முழுவதும் மிகப்பெரிய பஞ்சம் உண்டாகுமென்று உரைக்கப்பட்டது.
5. சபைக்கென்று தீர்க்கதரிசனம் உரைக்கப்படுவது. அப்போஸ்தலர், யோவான் மூலமாக ஏழு சபைகளுக்கும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது.

## தீர்க்கதரிசனத்தின் நோக்கங்கள்

1. எழுப்புதலைக் கொண்டு வருகிறது. அப். 2:16-18.
2. பக்திவிருத்தியையும், புத்தியையும், ஆறுதலையும் அளிக்கிறது. 1 கொரி. 14:3.
3. தரிசனத்தையும், இலக்குகளையும் கொடுக்கிறது. ஆதி. 37:5-15.
4. எதிர்காலத்திற்கென்று ஆயத்தம் செய்யவும், பாதுகாக்கவும் செய்கிறது. அப்போஸ்தலர் 11:28.

# தீர்க்கதரிசனத்தைச் சோதித்தறிதல்
## TESTS TO JUDGE PROPHECY

நாம் தீர்க்கதரிசனத்தை அற்பமாயெண்ணுகிறதில்லை. ஆனால் அவற்றை நன்றாகச் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். (1தெச. 5:20,21). தீர்க்கத்தரிசனம் கொடுக்கப்படும்போது அவற்றைச் சோதித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தீர்க்கதரிசனத்தை சோதிக்கப் பத்து வழிமுறைகள்**

1. வேத வசனங்களோடு ஒத்துப் போகின்றனவா? கலா. 1:8; ஏசா. 8:20.
2. தீர்க்கதரிசியினிடம் ஆவியின் கனிகள் காணப்படுகின்றனவா? மறுபடியும் பிறந்த அனுபவம், ஆவியின் நிறைவு, தாழ்மை மற்றும் தெய்வீகம் உள்ளதா? மத். 7:15-16.
3. இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துகின்றனவா? யோவான் 16:13-14, வெளி. 19:10.
4. தீர்க்கதரிசனம் பக்திவிருத்தியும், புத்தியும் மற்றும் ஆறுதலுமளிக்கிறதா? 1கொரி. 14:3
5. அந்தத் தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனம் ஏதாகிலும் நிறைவேறி இருக்கின்றனவா? உபா. 18:22.
6. உங்கள் இருதயத்திற்குச் சமாதானம் அளிக்கிறதா? கொலோ. 3:15.
7. தேவனுக்கு நேராக உங்களை நடத்துகிறதா? உபா. 13:1-3.

   உண்மையான தீர்க்கதரிசனம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்காது.
8. விடுதலையளிக்கிறதாக இருக்கிறதா? 2கொரி. 3:17, ரோமர் 8:15. உண்மையான தீர்க்கதரிசனம் உங்களை அடிமைத்தனத்திற்குள் கொண்டு செல்லாது.
9. உங்கள் உள்ளான ஆவியில் அவற்றை ஏற்றுக்கொள்ள முடிகிறதா? 1யோவான் 2:20.
10. உங்களுக்குள் விசுவாசத்தைக் கொண்டு வருகிறதா? ரோமர் 10:17.


**கம்ப்யூட்டர் தேவை**

நமது **பரிபூரண ஜீவன் பத்திரிக்கை** ஊழியத்திற்கு அவசரமாக ஒரு Desktop கம்ப்யூட்டர் தேவைப்படுகிறது. இதற்காக ஜெபித்துக்கொள்ளவும். கொடுக்க ஏவப்படுகிறவர்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்.



**Cell: 87789 08759, 96003 28821**



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பெ. பெவிஸ்டன்

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய் குட்டீஸ்..... எப்படியிருக்கிறீங்க? விடுமுறை நாட்கள் முடித்து புதிய வகுப்பிற்கு செல்ல ஆயத்தமாகி கொண்டிருப்பீர்கள். உங்களை வாழ்த்துகிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம். இந்த இதழில் சூப்பரான ஒரு கதையை கேட்கப்போகிறோம். வாருங்கள் கேட்கலாம்.

ஒரு செவலைக்கோழி பத்து முட்டைகளை இட்டது. அந்தப் பத்து முட்டைகளையும் இருபத்தியொரு நாள்கள் அடைகாத்தது. இருபத்தியோராம் நாள் முட்டையின் ஓட்டை உடைத்துக்கொண்டு ஏழு குஞ்சுகள் வெளியே வந்தன. மூன்று முட்டைகள் அப்படியே இருந்தன. தாய்க்கோழி அந்த முட்டைகளை உருட்டிப் பார்த்தது. ஒன்றும் அசையவில்லை. அந்த முட்டைகளை அடைகாத்த கூட்டிலிருந்து தள்ளிவிட்டது. அந்த மூன்று முட்டைகளும் கூமுட்டைகள். செவலைக்கோழி உண்ணாமல் உறங்காமல் அடைகாத்துப் பொரித்த அந்த ஏழு குஞ்சுகளையும் பெருமையுடன் பார்த்தது.

ஒரு குஞ்சு வெள்ளை நிறத்தில் இருந்தது. ஒரு குஞ்சு செவலை நிறத்தில் இருந்தது. ஒரு குஞ்சு கறுப்பு நிறத்தில் இருந்தது. ஒரு குஞ்சு கறுப்பில் வெள்ளைப் புள்ளிகளுடன் இருந்தது. ஒரு குஞ்சு வெள்ளையில் கறுப்புப் புள்ளிகளுடன் இருந்தது. ஒரு குஞ்சு சாம்பல் நிறத்தில் இருந்தது. ஒரு குஞ்சு செவலையும் கறுப்பும் கலந்து இருந்தது. குஞ்சுகள் எந்த கலரில் இருந்தாலும் நம் பிள்ளைகள் என்ற உணர்வில் பாசமாய் தாய் கோழி அனைத்தையும் பார்த்தது.

எல்லாக் குஞ்சுகளும் கிய்யா... கிய்யா... கிய்யா... என்று குரல் எழுப்பிக்கொண்டு அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தன.

தாய்க்கோழி "கெக்கெக்கெக் எல்லோரும் வாங்க" என்று கத்தியது. உடனே எல்லாக் குஞ்சுகளும் தாய்க்கோழியின் அருகில் வந்து நின்றன. ஆனால், சாம்பல் நிறக்குஞ்சு மட்டும் வரவில்லை. அந்தக் குஞ்சு அப்படியே உலர்த்திக் கொண்டிருந்தது. தாய்க்கோழிக்கு கோபம். உடனே கொஞ்சம் சத்தமாய். "க்ர்ர்ர்ர்" எனக்குக் கோபம் வந்துருச்சி.... உடனே வா...." எனறு கத்தியது.

தாய்க்கோழியிடமிருந்து விலகியிருந்த சாம்பல் நிறக்குஞ்சு மெல்ல அலட்சியமாய் நடந்து வந்து அருகில் நின்றது. தாய்க்கோழி சாம்பல் நிறக்குஞ்சை முறைத்துப் பார்த்தது. ஆனால் அதை எல்லாம் கண்டு கொள்ளவில்லை சாம்பல் நிறக்குஞ்சு,

செவலைக்கோழி குஞ்சுகளிடம், "குழந்தைகளே நான் சொல்றதைக் கவனமாகக் கேட்டுக்கங்க... நான் 'கெக்' னு சொன்னா கவனம்னு அர்த்தம். கேகெக்கேகேகே" கூப்பாடு போட்டா ஆபத்து ஆபத்து ஓடி வாங்க!னு அர்த்தம். "கெ... கெ... கெ...'னு மெள்ளக் கூப்பிட்டா இரை இருக்கு வாங்கன்னு அர்த்தம். இன்னிக்கு இது தான் உங்களுக்குப் பாடம் எல்லோரும் கேட்டுக்கிட்டீங்களா?" என்று பேசியது. அம்மா சொல்வதை எல்லாக்



குஞ்சுகளும் ஆர்வத்துடன் கேட்டன. சாம்பல் நிறக்குஞ்சு மட்டும் காதில் வாங்காமல் வாய்க்குள்யேயே கிய்கிய்யா... கிய்யா... கிய்கிய்யா... கிய்யா... என்று பாட்டுப்பாடிக் கொண்டிருந்தது. செவலைக் கோழிக்குக் கவலையாக இருந்தது. இப்படி அலட்சியமாக இருக்கே இந்தச் சாம்பல் நிறக்குஞ்சு என்று.

தாய்க்கோழி குஞ்சுகளுக்கு ஒவ்வொருநாளும் புதிய புதிய பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. எல்லா குஞ்சுகளும் அம்மா சொன்னதை ஆர்வமாய் கேட்டது. ஆனால் சாம்பல் குஞ்சு மட்டும் அம்மா சொன்னதைக் கேட்கவில்லை. சாம்பல் குஞ்சு கண்டபடி அலைந்து திரிந்தது. இஷ்டத்திற்கு இரை தேடியது.

அன்று காலை தாய்கோழியும் குஞ்சுகளும் இரைதேடி குப்பைமேட்டைக் கிண்டிக்கொண்டிருந்தன. மேலே வானத்தில் பருந்து தன் நீண்ட சிறகுகளை விரித்துப் பறந்துகொண்டிருந்தது. அந்தப் பருந்தின் நிழல் கீழே பூமியிலே விழுந்ததைப் பார்த்தது தாய்கோழி. உடனே தாய்க்கோழி, கேக்கேக்கேக்கே என்று அபாய எச்சரிக்கையை எழுப்பியது. உடனே எல்லாக் குஞ்சுகளும் அங்கங்கே கிடைத்த புதர்களுக்குள் பதுங்கிக் கொண்டன. தாய்க்கோழி சாம்பல் குஞ்சைத் தேடியது காணவில்லை.

சில நொடிகளுக்கு அப்புறம் சாம்பல் குஞ்சு ஒரு செடியின் மறைவிலிருந்த ஹாயாக கிய்கிய்யா கிய்கிய்யா என்று பாடிக்கொண்டே வெளியில் வந்தது. அது என்ன என்று நிமிர்ந்து பார்ப்பதற்குள் சாம்பல் குஞ்சின் மீது பருந்தின் நிழல் விழுந்தது.

ஆ... ஐயோ ஆபத்து வந்து விட்டதே... பருந்தின் இறகுச் சத்தம் சாம்பல் குஞ்சின் காதில் கேட்டது. அவ்வளவுதான் உயிர் போகப்போகிறது, இதோ பருந்தின் கால்களில் உள்ள கூர் நகங்கள் உடலைக் கிழிக்கப் போகின்றன. என்ன செய்து என்று சாம்பல் குஞ்சுக்குத் தெரியவில்லை. அப்படியே கண்களை மூடி உட்கார்ந்துவிட்டது. கிய்யா கிய்யா கிய்யா....

அப்பொழுது ஆவேசமாய் தாய்க்கோழி பறந்து வந்து பருந்தின் மீது மோதியது. பருந்து நிலை தடுமாறி கீழே விழுந்து புரண்டது. என்ன நடந்தது என்று தெரியாமல் அப்படியே மேலே எழுந்து பறந்து போனது பருந்து.

சாம்பல் குஞ்சின் அருகில் தாய்க்கோழி நின்றது. கண்களை மூடிப் பயத்துடன் உட்கார்ந்திருந்த சாம்பல் குஞ்சின் தலையில் தன் அலகுகளால் மெல்லத் தடவியது. சாம்பல் குஞ்சுக்கு அப்போதுதான் உயிர் வந்தது.

உடனே சாம்பல் குஞ்சு கண்ணீரோடு அம்மா நான் இதுவரை உங்களை கணம் பண்ணாமல் உங்களுக்கு கீழ்படியாமல் என்னோட இஷ்டத்திற்கு வாழ்ந்தேன். இப்பொழுது தான் எனக்கு புரிகிறது. பெரியவர்கள் வார்த்தைகளுக்கு இனி நான் மதிப்பு கொடுத்து நடப்பேன் என்றது. தாய்க்கோழி சந்தோஷமாய் அதை அணைத்துக்கொடுத்தது.

அன்பு தம்பி தங்கச்சி கதை எப்படியிருந்துச்சு? நீங்க எப்படியிருக்கிறீங்க?

உங்கள் பெற்றோர் கஷ்டப்பட்டவங்களா இருக்கலாம். படிப்பறிவு இல்லாதவங்களா இருக்கலாம். உங்க அளவிற்கு இங்கிலீஸ் பேசாதவங்களா இருக்கலாம். ஸ்மார்ட்டா டிரெஸ் போடாதவங்களா இருக்கலாம். பட் அவங்க உனக்கு இயேசப்பா கொடுத்திருக்கிற அப்பா அம்மா...

பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது (கொலோ. 3:20). பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம் (எபே. 6:1).

தாய்க்கோழியின் பாசத்தை தெரிஞ்சுக்கோ..... கீழ்படியாமையின் விளைவை புரிஞ்சுக்கோ.... இக்கதை குறித்த கருத்துக்களை 97503 81784 என்ற தொலைபேசி எண்ணில் தெரியப்படுத்துங்க. மற்றொரு கதையுடன் உங்களை அடுத்த இதழில் சந்திக்கிறேன் . காட் பிளஸ் யூ....

# குடும்பங்கள் காக்கப்பட ஐந்து ஆலோசனைகள்

## 1. தேவனுக்கு முதலிடம் கொடுங்கள்



இக்கனியை நீ புசிக்க வேண்டாம் என்று தேவன் ஆதாமிற்கு நேரடியாகவே சொல்லியிருந்த போதிலும், தன் மனைவியாகிய ஏவாளின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து, அக்கனியைப் புசித்து, தேவனை கனம்பண்ண தவறிவிட்டான் ஆதாம். இதனால் தேவனுக்கு முன்பாக நிற்கும் தகுதியை இழந்தார்கள். பூமிக்கு சாபம் வருவதற்கு காரணமாக மாறிப்போனார்கள். அதற்காக குடும்பத்தை அலட்சியமாக நடத்தவோ, கடினமாக நடத்தவோ வேதம் நமக்கு சொல்லவில்லை. தேவனுக்குரிய இடத்தை தேவனுக்கும், குடும்பத்திற்குரிய இடத்தை குடும்பத்திற்கும் சரியாய் கொடுப்போம். தேசத்திற்கு ஆசீர்வாதமாய் இருப்போம்.

## 2. உடன்படிக்கையில் உண்மையாக இருங்கள்

போத்திபாரின் மனைவியின் மனதில் யோசேப்பு, வாழ்க்கையில் போத்திபார், மனதில் ஒருவர், வாழ்வில் ஒருவர் எத்தகைய அவல நிலை!! உங்கள் நினைவையும் கண்களையும் காத்துக்கொள்ளுங்கள்.

## 3. குறைகளைப் பெரிதுப்படுத்தாதீர்கள்

மலடியாயிருந்த தன் மனைவிக்காக தேவனிடம் ஜெபம் செய்தார் ஈசாக்கு. ஆபிரகாம் மற்றும் யாக்கோபைப்போல வேறே மனைவிகளை தேடவுமில்லை. இந்த ஈசாக்கு மலடி என்று தன் மனைவியை கசந்து கொள்ளவுமில்லை, அவளைக் குறித்து சலிப்படையவுமில்லை. மாறாக, தன் மனைவியை நேசித்தும், அவளுக்காக ஜெபித்தும், அவளோடு, விளையாடிக்கொண்டும், அவளோடு மட்டுமே இறுதிவரை வாழ்ந்துகொண்டிருந்தார் இந்த ஈசாக்கு.

காரணமென்ன?? அன்பு! அன்பு!! அன்பு!!! வெறும் சரீர இச்சைகளை மட்டுமே உலகம் இன்று அன்பு என்று காண்பித்து வருகிறது. ஆனால் நமது பரிசுத்த வேதம் காட்டும் அன்போ சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் சகிக்கும். அன்பு தீங்கு நினையாது. இந்த அன்பு நம்மிடையே பெருகினால் “இன்று ஆவிக்குரிய குடும்பங்களில் பெருகிவரும் விகாகரத்துக்கள் நிச்சயமாக மறைந்தே போய்விடும்”

## 4. வெளியரங்கமாயிருங்கள்

உங்கள் வாழ்க்கையானது தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக திறந்த புத்தகமாய் இருப்பதாக. அனனியா, சப்பீராளைப்போல இருக்க வேண்டாம்.

## 5. தேவனுக்கு ஊழியம் செய்யுங்கள்

ஆக்கில்லா பிரிஸ்கில்லா குடும்பத்தைபோல, கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். இறுதிவரை கர்த்தருக்குக் குடும்பமாக சேவை செய்வதை பாக்கியமாகக் கருதுங்கள்.

இந்த ஐந்து காரியங்களையும் வாழ்வில் மறவாதிருங்கள். உங்களுடைய விலையேறப்பெற்ற குடும்பம் காக்கப்படும். ஸ்திரப்படும். உடைபடாமலிருக்கும்.

## சிறிய தீர்க்க தரிசன புத்தகங்களின் சுருக்கம்

| புத்தகத்தின் பெயர் | முக்கிய கருத்து | முக்கிய வசனம் | முக்கிய சிந்தனை | மேசியாவாகிய இயேசுவை குறித்த காரியம் |
|---|---|---|---|---|
| ஓசியா | பின்வாங்கிய யோகிறவர்களுக்கு தேவனின் அன்பு | 14:9 | திரும்புதல் | இரண்டாம் மோசே, தாவீது, இஸ்ரவேல் |
| யோவேல் | கர்த்தரின் வருகையின் நாள் | 2:13 | மனந்திரும்புதல் | நீதியின் ஆசிரியர் |
| ஆமோஸ் | உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு | 5:24 | நீதி | தாவீதின் கூடாரத்தில் வசிப்பவர் |
| ஒபதியா | இராஜ்ஜியம் கர்த்தருடையதாகும் | வச.21 | பெருமை கீழ்ப்படுத்தப்படுதல் | மிக உன்னதமான இரட்சகர் மற்றும் நீதிபதி |
| யோனா | தவறான எண்ணத்தை மேற்கொள்ளுதல் | 4-11 | தள்ளிவைக்கப்பட்ட நியாயத் தீர்ப்பு | உயிர்த்தெழுந்த தீர்க்கதரிசி |
| மீகா | நம்பிக்கையின் வெற்றி | 6:18 | தெய்வீக எதிர்பார்ப்பு | பெத்லேகேமிலிருந்து ஆளுபவர் |
| நாகூம் | எதிரிகளின் தோல்வி | 1.15 | நினிவேவின் முடிவு | நற்செய்தி கொண்டுவருபவர் |
| அபகூக் | விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் | 2:14 | விசுவாசம் | சாத்தானை ஜெயிப்பவர் |
| செப்பனியா | கர்த்தரின் கோபாக்கினை நாள் | 1:4 | மீதி இருப்பவர்கள் (Remnant) | ஜாதிகளுக்கு எதிரான சாட்சி |
| ஆகாய் | மனம் தளர்ந்த காலத்தில் துணிச்சலான பலம் | 1:8 | எழுந்துகட்டு | அனைத்து ஜாதிகளாலும் விரும்பத்தக்கவர் |
| சகரியா | நிகழ்கால உபத்திரவமும் எதிர்கால மகிமையும் | 4:6 (b) | தரிசனங்கள் (Visions) | அரியனை ஏறிய ஆசாரியனாகிய ராஜா |
| மல்கியா | தேவ அன்பு புண்படுதல் | 3:8 | தேவனை வஞ்சித்தல் | நீதியின் சூரியன் |

# Prayer Works Wonders

*Prayer is a Golden ladder through which my request are taken to my Heavenly Father and His blessing are brought down.*

*Prayer is a golden thread linking me with people near and far.*

*Prayer is the most effective medicine healing the hidden wounds of the heart.*

*Prayer is the costless cosmetic that beautifies the face and makes it shine.*

*Prayer is powerhouse empowering me to perform the most difficult tasks of life.*

*Prayer is the best lubricant enabling the wheel of daily life roll on without any friction.*

*Prayer is a vehicle that takes me from the deepest depression to the heights of joy!*

*Prayer is the most powerful weapon to defeat the enemy.*

*Prayer is a panacea for all the evils that haunt the modern society.*

*There is no end to the power of Prayer*

*"More things are wrought by prayer than this world dreams of"*

*said Lord Tennyson. How far have we realised this?*

***A. Selva Rani Jansi, Sattur.***

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 71

(எஸ்றா, நெகேமியா) பொருத்துக

| | தகப்பன் | | குமாரன் |
|---|---|---|---|
| 1. | மீகா | - | மத்தனியா |
| 2. | யெசுவா | - | யோசபாத் |
| 3. | சிக்ரி | - | யோவேல் |
| 4. | உரியா | - | மெரேமோத் |
| 5. | சாதோக் | - | மெசுல்லாம் |
| 6. | அராயா | - | ஊசியேல் |
| 7. | செயல்தியேல் | - | செருபாபேல் |
| 8. | எலியாசிப் | - | யோகனான் |
| 9. | மல்கியா | - | பஸ்கூர் |
| 10. | ஆசகேல் | - | யோனத்தான் |
| 11. | ஊர் | - | ரெப்பாயா |
| 12. | கொல்லோசே | - | சல்லும் |
| 13. | ஆசாப் | - | சக்கூர் |
| 14. | யெகியேல் | - | செக்கனியா |
| 15. | இத்தோ | - | சகரியா |
| 16. | செராயா | - | எஸ்றா |
| 17. | திக்கா | - | யக்சியாவ் |
| 18. | சாபா | - | பாரூக் |
| 19. | அகலியா | - | நெகேமியா |
| 20. | பின்னூய் | - | நொவதியா |

## போட்டி எண் : 71 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை** : மாது; பியூலா; மரகதம்; டோரா; A.மஞ்சு; T.ஜெபா; சித்ரா; குளோரி; K.மஞ்சு; புஷ்பவல்லி; K.விஜி; கந்தையா; மகேஸ்வரி; T.கலா; மாரிமுத்து; கிரிஜா; லீதியாள்; G.முத்துலெட்சுமி; சுபா; தங்கமணி; S.முத்துலெட்சுமி; எலிசபெத்; கோகிலா; S.கலா; ஸ்வீட்லின்; சாந்தி; அமுதா; ராதாமணி; **ஸ்ரீவில்லிபுத்தூர்** : தேவபிரியா; மெசி; கிறிஸ்டி பிரியா; பாஞ்சாலி; சாம்; ஆபிரகாம்; ஞானம்; ஜெயராணி; சத்யா; அனிதா; நித்யா; இவாஞ்சலின் ஆக்னஸ்; ஜெசிக்கா ஆக்னஸ்; டெய்சி ராணி; **இடைப்பாடி** : பாக்கியம் : ரூத்; சந்திரா; வனிதா; மாலதி; மேரி; எப்சிபா; ரெஜினா; **கடையநல்லூர்** : நளினி; ஜெப சீதாலெட்சுமி; மேரி குட்டி; தங்கராஜ்; ஸ்டெல்லா; ஆஷா தேவி; செல்வி இந்திராணி; **கூவத்தூர்** : எட்வர்ட்; விஜியா; கௌரி சலோமி; சாம் பாலாஜி; சாமுவேல்; **கொட்டாகுளம்** : ஜெபமேரி, ஜான்சிராணி; ரக்ஷனா; ஏஞ்சல் ராணி; ரெஜினா; **அச்சிறுப்பாக்கம்** : தமிழ்ச்செல்வி; டாரத்தி; ஏஞ்சலின் பிரீடா; ஸ்டுவர்டு; செல்வகுமாரி; ஸ்டீவாக்; **நாசரேத்** : பரிபூரணம்; மெர்சி; தாசன் மோசஸ்; இவாஞ்சலின்; மேரி; **பரமத்தி வேலூர்** : கெத்சியாள் பூவிழி; பாமா; சரண்யா; திருச்செல்வி; **வந்தவாசி**; அபிஷா சுமதி; ஜூலியட்; மீனா; விஜயா; **ஆலங்குளம்** : ஸ்டீபன்; ரோஸ்லின்; ஸ்டெல்லா; லதா பெர்சியாள்; **தேனி** : பூங்கோதை; கிருபா; திரவியசெல்வி; மீனா; **திருநின்றவூர்** : வின்சி; லாலி; ஜென்சி; எழிலரசி; **அந்தமான்** : விஜய்; சலோமி; ஜேக்லின்; **மதுரை** : மேரி; மரியரூபி பிளாரன்ஸ்; கனகவல்லி; **திருத்துறைப்பூண்டி** : மெர்லின்; தனலெட்சுமி; ஐசக் ஜெபராஜ்; **வத்ராப்** : அருள்செல்வி : ஜெபராணி; கிறிஸ்டி; **வடக்கு ஆத்தூர்** : பியூலா; தங்கம்; தேவராஜ்; **ஆண்டிபட்டி** : புளோரியா; மேரி; தேவபாக்கியம்; **அரும்பாக்கம்** : ஹெப்சிபா ரத்தினமணி; மேரி; ஜெனிட்டா தங்கராணி; **சிட்லபாக்கம்** : தாமரைச்செல்வி : ஜோதி; இரத்தினம்மாள்; **சென்னை** : ரஞ்சிதம் : ஜாஸ்மின்; மெர்லின் ஹெலன் பிரீத்தியா; **முத்தையாபுரம்** : மங்களம்; ஜீவிதா; காபிரியேல்; அந்தோணி; **சாத்தூர்** : லாவண்யா; சங்கீதா; **திசையன்விளை** : லீலா; ஜெயசீலி; **காரைக்கால்** : உமா; ராஜாமணி; **நாகமலை** : ஹில்டா; விஜிலா; **கிச்சிபாளையம்** : கிறிஸ்டல் ஜான்; சாரோன் ஜெயரூபி; **தர்மபுரி** : எஸ்தர்; நீனா பிரித்தா; **களக்காடு** : வசந்தா; விமலா; **திருமுல்லைவாயில்** : ஜெனிபர் ; தீபா; **தாம்பரம்** : ரவித்தா; சிந்து; **பழனி** : பிரீத்தி; சாந்தி; **காளையார்கோவில்** : சத்யா; அருளானந்தம்; **புதுச்சேரி** : ஆரோக்யமேரி; குப்பபம்மாள்; **திண்டிவனம்** : ஜெசிந்தா; அறிவுசெல்வி; **பாளையங்கோட்டை** : மெரில் அலிஸ்; சாந்தகுமாரி; **இடையன்குளம்** : வைலட்மேரி; **ஏர்வாடி** : மரகதம் : **சாயர்புரம்** : தேன்மொழி; **கம்பம்** : ஜென்ஸி; **பெங்களூர்** : தேவபிரியா; **மம்சாபுரம்** : யோகராணி; **தூத்துக்குடி** : ஸ்டார்லினா; **திருச்சி** : கிறிஸ்டி மகாலஷ்மி; **ஸ்ரீரங்கம்** : சாந்தி; **சேலம்** : ராணி; **பத்தூர்** : மேரி சுஜாதா; **T.N.பாளையம்** : சுஜா; **V.K.புரம்:** நிர்மலா; **பெருமாள்புரம்** : சந்திரா; **ஓசூர்** : ஐடா; **வடக்குகோணம்** : மரியநேசம் ; **திருப்பத்தூர்** : ரூத் தெய்வானை; **குள்ளம் பாளையம்**; ருக்மணி; **மூலக்கரைப்பட்டி** : மல்லிகா; **புதுக்கோட்டை**: லலிதா; **கணேசபுரம்** : கலையரசி; **நாகலாபுரம்** : ஜாய்; **நம்பியூர்** : சுகந்தி; **K.T.C.நகர்** : பிரேமா ரூத்; **வளையபட்டி** : ஜாயல் பெர்சிஸ்; **பேயன்விளை** : பானுமதி; **நாங்குநேரி** : வாணி; **ஆசாரிபள்ளம்** : ஏஞ்சல்குமார்; **மரக்காணம்**; பிரான்சினாள்; **விருத்தாசலம்** : சுகிர்தா;

## போட்டி எண் : 71 (சரியான விடை எழுதியவர்கள்)....

**பள்ளிக்கரணை**: கீதா மகேஸ்வரி; **புளியங்குடி** : ஞானமணி; **ஆழ்வார்குறிச்சி** : ஹரில்லா; **மடத்துக்குளம்** :ஜெனி மெரிலின் கிருபா; **அரசூர்** : ரோஸ்லின் சாந்தி; **வெள்ளோடு** : விசுவாசமேரி; **சின்னாளபட்டி** : சலோமி; **இராசிபுரம்** : அருணாசலம்; **ஆறுமுகநேரி** : கஸ்தூரி; **மலுமிச்சம்பட்டி** : பிரிஸ்கில்லா.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 72

எஸ்தர், யோபு (1-10 அதிகாரங்கள்)

1. தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானம் உண்டாகப் பேசுகிறவனுமாயிருந்தவன் யார்?
2. ஆமானின் மனைவி பெயர் என்ன?
3. எஸ்தரின் மறுபெயர் என்ன?
4. யூதர்களின் 12-ம் மாதம் எது?
5. ராஜாவாகிய அகாஸ்வேருவின் மேல் கை போட வகை தேடினவர்கள் யார்? யார்?
6. மகா ரூபவதியாயிருந்த ராஜ ஸ்திரி யார்?
7. இது ஒரு சீட்டு?
8. எதினால் ராஜாவின் உக்கிரம் தணிந்தது?
9. யூதர்களின் 3-ம் மாதம் எது?
10. இது ஒரு பண்டிகை?
11. இதில் சுவை இருக்காது? எதில்
12. நாகமாத்தியனான இவன் யார்?
13. இவன் இனி ஏறிவரான் யார் இவன்?
14. உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது என்று சொன்னது யார்?
15. உலகம் யாருடைய கையில் விடப்பட்டிருக்கிறது?
16. எது நிர்மூடனைக் கொல்லும்?
17. பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறை சொல்லவுமில்லை யார்?
18. எதை விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள்?
19. உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும் முடிவு சம்பூரணமாயிருக்கும் என்றது யார்?
20. நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது என்று சொன்னது யார்?

| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.08.2018 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |
|---|---|



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**"பரிபூரண ஜீவன்"**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002

## மிஷனரி இயக்கத்தின் மூலம் நடைபெற்ற வடஇந்திய மிஷனரி ஊழியங்கள், கன்வென்ஷன்கள்



Mission Regional Directors Meeting


Punjab Mission Trip





Tanjore North Mission Convention


Jharkhand Mission Trip


Odisha Mission Trip


Bihar Mission Trip


Mizoram Mission Trip


Mizoram Mission Trip

Registered News Paper Regd. No. 8206 / 62

## வசவப்பபுரம் ஆலய பிரதிஷ்டை, தூத்துக்குடி மண்டலம்











## வெள்ளரிபட்டி ஆலய பிரதிஷ்டை, மதுரை வடக்கு மண்டலம்





## தூத்துக்குடி மண்டல ஆண்கள் ஐக்கிய முகாம்



BOOK POST

If Undelivered please return to
PARIPOORANA JEEVAN
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165